சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் —"குறள்"

பிரதி சனிக்கிழமை வெளிவரும்

தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

" போற்றுபவர் போற்றட்டும் ;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து சொல்வேன் !
ஏற்றதொரு கருத்தை என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் ; எவர்வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !"

உள் நாடு (இலங்கை உட்பட,) விலை இரண்டணா | வெளி நாடு மூன்றணா.

மலர் 1 | சென்னை 14—8—1954 சனி | இதழ் 8

தலைவன் திருநகர் வாரீரோ!

புலமைக் காஞ்சியைப் பாரீரோ!

திருமணத்திற்கு நாள் குறித்தவுடன், அந்த நாளை எதிர்நோக்கியபடி இருக்கும் மணமக்களைப் போல........

கையிலிருந்த பணம் தீர்ந்த நேரத்தில், சம்பள நாளை எதிர்பார்த்திருக்கும் ஊழியர்களைப் போல......

ஒரு பருவக் காய்களை விற்று முடிந்தவுடன், மறு பருவத்தை வளமாக்க, உற்சாகத் தோடு உழைத்து, பலனை எதிர்நோக்கி இருக்கும் காய்கறித் தோட்டக்காரன் போல....

திராவிட சமுதாயம், புதுமைக் கருத்துக்களைக் கேட்டு, வகுத்திருக்கும் வழியில் வலிவோடு பயணம் தொடர எதிர்நோக்கி இருக்கும் நாட்கள், இம் மாதம் 21, 22 தேதிகள் !

அந்த நாட்களில் தான்...காஞ்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின், சமூக—அரசியல் மாநாடுகள் நடைபெற இருக்கின்றன. செங்கலபட்டு மாவட்டக் கழகத்தின் சார்பில், காஞ்சியில் கூடும் இம் மாநாடுகள் தி. மு. கழகத்தின் வரலாற்றில் முக்கியமான இடம்பெறப் போகின்றன.

* * *

முதல் நாள் சமூக சீர்திருத்த மாநாட்டிற்கு, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தலைமை தாங்குகிறார்கள். புத்துலகின் பிரதிநிதி, சர்க்கரையில் மருந்து செய்து நோய் தீர்க்கும் மருத்துவர், இருபத்தைந்து ஆண்டுகாலமாக சுயமரியாதைப் பிரசாரம் செய்பவர், ஏச்சுக்கும் பேச்சுக்கும் பயந்து, கொள்கை வழுவாமல் இருப்பவர், நம் கலைவாணர் கடந்த மும்முனைப் போராட்டத்தின் போது, சொந்த வேலைகளை விட்டுவிட்டு, கைதாகி இருந்த இயக்க வீரர்களைக் கண்டு பேசப் பல இடங்களுக்கும் சென்று வந்தார். கல்லக் குடியிலே கைதான தோழர் கருணாநிதியையும் இராம. சுப்பையாவையும் மற்றைய தோழர்களையும் திருச்சி மத்திய சிறையிலே பார்த்துவிட்டு, லால்குடி உப சிறையிலே இருந்த தோழர்களையும், பட்டுக்கோட்டை சிறையில் இருந்த தோழர்களையும் சந்தித்துப் பேசிவிட்டுச் சென்றார். இவ்வளவும் போராட்டம் நடந்த மறுநாளே ! அதன் பிறகு. கல்லக்குடி வழக்கில் நாங்கள் தண்டிக்கப்பட்டு திருச்சி மத்திய சிறையில் இருந்தபோதும் வந்து கண்டார். நாடகங்களிலே, துப்பாக்கி பிரயோகத்தைக் கடுமையாகத் தாக்கினார்—இப்படி எந்த நேரத்திலும் இயக்கக் கொள்கைகளை மறவாமல் — வழுவாமல் — பின்பற்றுபவர், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.

சமூக சீர்திருத்தத்தில் அவருக்குப் பெரும் பங்கு உண்டு. அவர் இம் மாநாட்டின் தலைவராக இருப்பது சாலப் பொருந்தும்.

* * *

புரட்சி நடிகர் இராமச்சந்திரன் இயக்கத்திற்குக் கிடைத்த மணிகளில் ஒருவர். கதராடையும், ஜெபமாலையுமாக இருந்த தோழர் இராமச்சந்திரன், கருப்புக் கொடியும் கையுமாகப் பணி செய்யப் புறப்பட்டார், சில ஆண்டுகட்கு முன். அன்று முதல் இன்று வரை தீவிர வாதிகளில் ஒருவராக இருந்து பணியாற்றி வருகிறார்.

இந்த மாநாட்டில் 'கேரளத்தின் குரல்' எம். ஜி. ர்ராமச்சந்தின் திறப்பாளராக அமைந்தது உண்மையில் மகிழ்ச்சி தரும் செய்தியாகும். முன்பெல்லாம் ஒரே ஒரு கேரள நடிகரின் குரல் ரகசியமாக — தி. மு. க. கொள்கைகளை பல இடங்களில் முரசறிவித்துக் கொண்டிருந்தது. அது தோழர் இராமச்சந்திரனின்சகோதரரான சக்ரபாணியின் குரல். அதன் பகிரங்கப்பதிப்பு எம்.ஜி. இராமச்சந்திரனின் குரலாகும். தோழர் இராமச்சந்திரனை திறப்பாளராக்கிய செங்கல்பட்டு மாவட்டக் குழுவைப் பாராட்டவேண்டும்.

தாயகம் மீட்டிடச் சேரீரோ!

இரண்டாம் நாள் அரசியல் மாநாட்டிற்கு தோழர் இரா. சு. தங்கப்பழம் தலைமை வகிக்கிறார். தூத்துக்குடிச் சுரங்கத்தில் எடுக்கப்பட்ட தங்கப் பாளம்; துன்பத்தைக் கண்டு சலிக்காத தமிழ் வேழம்; பழகுவதற்கு இனிமையான உள்ளம் படைத்த செல்வம்; பகைவர்களின் 'கனவில் கூடத் தோன்றி' பயமுறுத்தும் வீரன்; 'கிளர்ச்சி' மூலம் கயவர்களின் கொட்டத்தை அடித்து நொறுக்கும் திரன்; சதி வழக்கில், 'சதிகார ஆச்சாரியாரின் சர்க்கா'ரால் குற்றம் சாட்டப்பட்டு பத்து மாதம் 'ரிமாண்'டிலேயே இருந்தவர் — தோழர் தங்கப்பழம். "நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்" கொண்டவர். அவரை அரசியல் மாநாட்டிற்குத் தலைமை வகிக்கச் செய்தது, அதிகம் உழைத்தவர்களுக்கு இயக்கம் காட்டும் நன்றியாகும்.

* * *

அரசியல் மாநாட்டின் திறப்பாளர் திருச்சித் தோழர் எம். எஸ். மணி, சலியாத உழைப்பாளி; கல்லக்குடிப் போராட்டத்தில் இராப் பகலாக ஒத்துழைத்தவர். கரிய நிறம்; ஆனாலும் கரியின் உரம் !—கையிலிருக்கும் பையில் திருச்சிக் கழகத்தின் செயல் முறையை வைத்துக் கொண்டு, நேரம் தவறாது செய்து முடிப்பவர் தோழர் மணி. அதனால் இவர் பல வேளைகள் உண்ண நேரமில்லாமல் 'உபவாசம்'இருக்கவும் நேர்ந்ததுண்டு. யாரையும் பகைத்துக் கொள்ளாமல் சிரித்துச் சிரித்துக் காரியம் பார்ப்பவர் தோழர் மணி. அவர் திறக்கும் மாநாட்டை, காண வேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் ஏற்படுவது இயற்கை தானே?

* * *

அத்தனைக்கும் முத்தாரம் போட்டது போல் நம் தலைவன் திருநகரிலே அவரது அரிய கருத்துரைகளோடும், இயக்க முன்னணி வீரர்களின் அறிவார்ந்த சொற்பொழிவுகளோடும், இம் மாநாடு நடைபெற இருக்கிறது. வேர்வையைத் துடைக்க நேரமின்றி

புதுமைக் கருத்துரை தாரீரோ!

உழைக்கும் சி. வி. எம். அண்ணாமலை, வரவேற்புக் குழுத் தலைவர். தீவிரத் தோழர்கள் இரா. வெங்கடேசன், சே. கோ. பெருமாள், டி. சபாபதி ஆகியோர் செயலாளர்கள். இயக்க ரத்தினங்கள் எத்திராஜு, சிவானந்தம், ராஜரத்தினம், வகாப் ஆகியோர் தொண்டர் படைத் தலைவர்கள். மற்றும் காஞ்சிக் கருவூலங்கள் யாவரும் சேர்ந்து பாடுபடும் இம் மாநாட்டிற்கு, இயக்கத் தொண்டன் என்பதை முன்னிட்டு, "சேர வாரும் ஜெகத்தீரே!" என்று அழைக்கிறேன் !

—கண்ணதாசன்

எண்ணம்

கண்ணதாசன்

மௌண்ட் ரோடு பொதுக் கூட்டத்தில் அண்ணா ஒன்று சொன்னார். அதன் சாரம்தான்: "ஆச்சாரியார் ஆட்சி ஒழிந்து காமராசர் ஆட்சி வந்துவிட்டதனால் நமது பிரச்சினைகள் தீர்ந்து விட்டனவா? இல்லை. கொஞ்சம் மாற்றம்—அவ்வளவு தான். ஒரு உதாரணம் சொல்லுகிறேன். ஒருவனுக்கு வயிற்றுவலி வருகிறது. டாக்டர், அதற்குக் காரணமாக அவன் சாப்பிடும் ஓட்டலைக் குறிப்பிடுகிறார். வியாதியஸ்தன் ஓட்டலை மாற்றுகிறான்; வயிற்றுவலி நின்றுவிடுகிறது. அதுமட்டும் போதுமா? "நமக்கென்று ஒருத்திவந்து, நாம் வாங்கித்தரும் அரிசி பருப்பைச் சமைத்து, நாவிற்கு சுவையாய், கனிவோடு பரிமாறும் நாள் என்றோ!" என்று ஏங்கிக் கொண்டுதான் இருப்பான். அதுபோலவே ஆச்சாரியார் ஆட்சி பழைய ஓட்டல்; காமராஜர் ஆட்சி புதிய ஓட்டல்; திராவிட நாடு பிரச்சினை தான் "நமக்கென்று ஒருத்தி."

* * *

இந்தக் கருத்தைப் பலரும் எண்ணிப் பார்க்க வேண்டும்; மிகவும் நிதானமாக யோசித்துப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால், மாற்றுக் கட்சியினரில் ஓரிருவரோடு நாம் நட்புறவு கொள்ள நேரும்போது அது எந்த நிலையில் இருக்கும்—இருக்க வேண்டும் என்பது புலனாகும். நேசம்—நட்பு—உறவு என்றால் ஒரேயடியாக வாரிக் கட்டிக்கொண்டு மற்றவர் பின்னாலே போய் "ஆகா! ஊஹூ! நானும் நீயும் ஒன்று!" என்று தன்னை மறந்த நிலையில் கூச்சல் போடுவது ஒரு கட்சியின் அடிப்படையையே தகர்த்துவிடும். "நீ அவல் கொண்டு வா; நான் உமி கொண்டு வருகிறேன்—இருவரும் ஊதி ஊதித் தின்போம்" என்கிற முறையில் தான் மாற்றுக் கட்சிக்காரர்கள் நம்மிடம் உறவுகொள்ள வருகிறார்கள். அந்த உறவைப் பெரும் பேறாகக் கருதி அவல் கொண்டு போகிறவர்களை உலகத்திலே 'இளித்த வாயர்கள்' என்று குறிப்பிடுவது வழக்கம். நாம் இளித்தவாயர்களாக இன்று வரை ஆகவில்லை; நாளைக்கும் ஆகமாட்டோம்.

* * *

காமராஜர் வென்றார்; ஆச்சாரியாரையும் கல்வித் திட்டத்தையும் எதிர் நிறுத்திப் பார்க்கும் போது அதுசரி; பாராட்டுவோம். ஆனால் ஆதை காங்கிரஸின் வெற்றி என்கிறார்; அதற்காகப் பரிதாபப்படுவோம் — அனுதாபப்படுவோம். காங்கிரஸ் தான் நாட்டுக்கே மருந்து என்கிறார்; எள்ளிச் சிரிப்போம்—காரணம் நாம் நமது அடிப்படைக் கொள்கையில் தளரா உறுதிகொண்டிருக்கிறோம். 'திராவிட நாடு' இல்லாமல் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பது நமது அசைக்க முடியாத முடிபு. இதைக் காமராசர் பகிரங்கமாக ஆதரித்தாலொழிய, நமது முழு உதவியையும் அவர் பெற முடியாது. அவர் நல்லவர்—உண்மை; திராவிடர்—சரிதான்—ஆனால் எங்கே இருக்கிறார்? சாக்கடையில்! அதாவது காங்கிரஸில்! அதை 'மருந்து' என்று அவர் சொல்வது அவரது சிந்தனா சக்தியில் நமக்குச் சந்தேகத்தைக் கிளப்புகிறது. உண்மையில் வடநாட்டுத் தலைமையுடன் கூடிய காங்கிரஸால்தான் இந்நாடு இழிநிலையுற்றது என்பதைக் காமராசர் அறியாமலிருக்க முடியாது.

* * *

நம்மிடத்திலே அவர் அன்பு கொண்டிருப்பது உண்மையானால், நமது பாசத்தை அவர் விரும்புவது உண்மையானால், பகிரங்கமாக நமது கொள்கையை ஒப்புக் கொண்டாக வேண்டும். அது இல்லாமல், "நானும் நீயும் ஒன்று" என்ற பேச்சுக்கோ, 'ஒத்துழைப்பு' என்ற ஏமாற்றுக்கோ நாம் பலியாகிவிட மாட்டோம். நமது நட்பைப் பெற்று அதை அப்படியே, காங்கிரஸின் பலமாகத் திசை திருப்பி விட அவர் முயன்றால், பகல் கனவாக முடியும் என்பதைக் காமராசர் உணரவேண்டும்.

* * *

அதனால் தான் தீர்க்கதரிசனத்தோடு அண்ணா சொன்னார்: "நம்முடைய கொள்கைகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ செயல்படுத்துவதற்கு அவர் முயல்வார்என்கிற உறுதி ஏற்படாதவரை, பாசமும் நேசமும் பயன்படாதவை" என்று. ஆகவே நம்முடைய தோழர்கள் சிந்திக்க வேண்டியது இதுதான்: "நம்முடைய பிரச்சினைகளை மறைக்கிறவர்களும் மறுக்கிறவர்களும், அவர்கள் எவ்வளவுதான் நல்லவர்களாக இருந்தாலும், தூரத்திலே நிறுத்தி அழகு பார்க்கத் தகுந்தவர்களே தவிர, நாம் அன்பு செலுத்தக் கூடிய யோக்கியதையைக் கூடப் பெறத் தகுதி உள்ளவர்கள் அல்ல!"

* * *

"திராவிட நாடு!"—அது இல்லை என்றால் எதுவும் இல்லை என்பதுதான் நமது உறவு தேடி வருகிறவர்கட்கு நாம் சொல்லும் பதில்.

ரோஜாப் பூ

காதலியை மலராக்கி கதை சொல்கிறான் ஜவான் துர்கனேவ்

ஆகஸ்டு மாதத்தின் கடைசிப் பகுதி...இலையுதிர் காலம் நெருங்கிக் கொண்டிருக்கும் சமயம். அன்று சூரியாஸ்தமனத்தின்போது இடியோ மின்னலோ இல்லாமல் திடீரென்று பலத்த மழை பெய்து, அந்தப் பெரிய சமவெளியில் தண்ணீர் வெள்ளமாக ஓடியது.

வீட்டுக்கு முன்னால் உள்ள தோட்டம் அஸ்தமன சூரியனின் செவ்வொளி பட்டு விகசித்தது; அந்தப் பெரு மழைக்குப் பின்னர் தோட்டத்திலிருந்து ஆவிப் படலம் கிளம்பியது.

அவள் சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் மேஜையின் அருகே உட்கார்ந்திருந்தாள். பாதி திறந்த வாசலின் வழியாக தோட்டத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்தச் சமயத்தில் அவளுடைய உள்ளத்தில் என்னென்ன சிந்தனைகள் உலாவின என்று எனக்குத் தெரியும். சிறு போராட்டம் ஒன்று நடந்தது; ஆனால் வேதனை மிக்க போராட்டம்; அதன் பிறகு அவள் தன்னால் கட்டப்படுத்த முடியாத ஒரு உணர்ச்சியிடம் தன்னை ஒப்படைத்து விட்டாள். இந்த விஷயமும் எனக்குத் தெரியும்.

திடீரென்று அவள் எழுந்தாள். வேகமாகத் தோட்டத்தினுள்ளே சென்றாள்; அப்புறம் மறைந்து விட்டாள்.

ஒரு மணி நேரம் சென்றது; அதன் பின்னும் ஒரு மணி நேரம் சென்றது—அவள் திரும்பி வரவில்லை.

பிறகு நான் எழுந்து வீட்டை விட்டு வெளியே சென்றேன். அவள் எந்த வழியாக நடந்து சென்றாள் என்று நான் உறுதியாகக் கருதினேனோ அந்த வழியிலேயே நானும் நடந்தேன்.

சுற்றிச் சூழ சந்தியா காலக் கருக்கல் இருக்க இருக்க அதிகமாகிக் கொண்டிருந்தது; இரவு சமீபித்து விட்டது. ஆனாலும் கூட, பாதையின் ஈரமணலில் ஒரு வட்ட வடிவமான வஸ்து இருட்டின் நடுவே செக்கச்செவேர் என்று பிரகாசித்துக் கொண்டிருப்பதை என்னால் பார்க்க முடிந்தது.

அதைப் பார்த்துக் குனிந்தேன். அது ஒரு ரோஜா; அப்பொழுதுதான் இதழ் விரித்த ஒரு புது ரோஜாப் பூ. இரண்டு மணி நேரத்துக்கு முன், அதே ரோஜா அவளுடைய மார்பில் இருந்ததை நான் பார்த்தேன். அந்தப் பூவை குப்பையிலிருந்து ஜாக்கிரதையுடன் எடுத்தேன். வீட்டுக்குத் திரும்பி வந்து, அவளுடைய ஆசனத்தின் முன்பாகக் கிடந்த மேஜை மீது அதை வைத்தேன். கடைசியில் அவள் நடந்து வந்து, மேஜையினருகே உட்கார்ந்தாள்.

அவளுடைய முகம் முன்னை விட அதிகமாக வெளுத்தும், உணர்ச்சிப் பிரவாகத்துடனும் இருந்தது. அவள் கீழ் நோக்கிப் பார்த்தாள். தன் கண்கள் சின்னதாகி விட்டன என்று கருதிப் பார்ப்பது போல, ஏதோ சந்தோஷம் நிறைந்த கூச்சத்துடனும், வேகத்துடனும் அறையினுள்ளே இங்குமங்கும் பார்த்தாள்.

ரோஜாப் பூவைப் பார்த்துக் கொண்டாள்; உடனே அதைத் தன் கையில் எடுத்தாள். தூசி தும்பு படிந்து சுருண்டுபோயிருக்கும் ரோஜா இதழ்களை உற்றுப் பார்த்தாள்; அப்புறம் என்னைப் பார்த்தாள்—அவளுடைய விழிகள் திடீரென்று தம் அசைவை நிறுத்தின; விழிகளில் கண்ணீர் பொங்கியது.

"ஏன் அழுகிறாய்?" என்று கேட்டேன்.

"இந்த ரோஜாப் பூவுக்காகத்தான். இதற்கு நேர்ந்த கதியைப் பார்" என்றாள்.

அங்கே தத்துவ பூர்வமாகப் பேசத் தொடங்கினேன். அப்படிப் பேசுவது அந்தச் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமாகத் தோன்றியது. "உன்னுடைய கண்ணீர் அந்த அழுக்கைக் கழுவி விடும்" என்று ஒரு தனி விசேஷத்துடன் கூறினேன்,

அவளோ, "கண்ணீர் சுத்தம் செய்யாது; எரிக்கும்" என்று பதில் சொல்லிவிட்டுக் கணப்பைப் பார்த்துத் திரும்பினாள்; பிறகு அந்தச் சிறு மலரை, அணைந்து கொண்டிருக்கும் தீக் கொழுந்துகளில் எறிந்துவிட்டாள்.

"கண்ணீரை விட நெருப்பு அதை நன்றாக எரிக்கும்" என்று அடக்க ஒடுக்கமின்றி ஆர்ப்பாட்டமாகச் சொன்னாள். பொங்கிய கண்ணீருடன் அவளுடைய அழகிய விழிகள் துணிச்சலும் மகிழ்ச்சியும் கொண்டு சிரித்தன.

அவளும்கூட எரிக்கப்பட்டு விட்டாள் என்பதை நான் உணர்ந்துகொண்டேன். *

இலக்கியத்தில் காதல்

காரை. முத்துப்புலவர்

ஐயரைக் கண்டதும், கிழட்டு மாமி 'வெட்க நடிப்பு' நடிக்கிருள். பாவம் கச்சிதமாக அமைகிறது. அடடா! பழமொழி சொல்வார்கள்: "ஏண்டி பாட்டி மஞ்சள் குளிக்கிறே என்ருனும்; பழைய நினைப்புடா பேராண்டி!" என்ருளாம். —அதுபோல நடிக்கிருள், கிழவி. அது பார்ப்பனனுக்குத் தெரியவேண்டுமென்பதற்காக அவள், "தன்னுடம்புக் கோணலுக்குள்ளே சற்றுக் கோணிஞள்" என்கிருன் கவி.

"அட சாமி! நீர் சந்தோஷமாக இங்கே வர எங்கள் மனை என்ன தவஞ் செய்ததோ! கன்னி, முந்தாநாள் கண்ட கனு நன்மையாகி விட்டது. எனக்குத் தெரியும்! என் தங்க மகளுக்கு இடது தோள் துடித்தது; ஆள் வரும் என்பதற்கு அறிகுறியாக காகம் கதறியது; கட்டை சிதும்பியது; (அதாவது "தீ ஊதுகிறது" என்பார்களே, அது.) குறத்தி வேறு குறி சொன்ஞள்; பல்லி நேரம் பார்த்து நிமித்தம் சொன்னது! நான் உடனே மகளிடம் சொன்னேன், "இன்றைக்கு நல்லவர்கள் வருவார்கள்" என்று! அதுபோலவே வந்தீர்கள். என் ஆசை மகள் குணம் எப்படி என்று இன்னமும் அறியமாட்டீர்கள். பொய்ப் புரட்டுச் சாலவித்தைப் பெண்களின் தடத்தில் மிதிக்கமாட்டாள். மாய வித்தைப் பெண்கள் மனைக்குப் போகாள். பரத்தையரைப் போலே, பணங்காசு தேடுங் கருத்துக் கிடையாது. இதுவரை ஒருத்தரும் 'டச்சுப்' பண்ணவில்லை. விரித்த படுக்கை விரித்தபடி இருக்கிறது; முதன் முதலில் மகராசன் நீர் வந்தீர்! யாரிடமும் மானுனை விடவில்லை —ஐயோ! கிரந்திப் புண் வந்ததானல் ஒரு காசுக்காவாளா கண்மணி! அவள் இன்னமும் சின்னவள்தான். அட, கொஞ்ச வயதுதான் என்ருலும் உம்மைக் கொஞ்சும் வயதுதான்! வஞ்சி நல்லாள், தன் மனதுக்குப் பிரியமான 'லவ்வரை' தேடிக்கொண்டு விட்டாள். இனி மன்மதனே வந்து கோடிப் பொன் கொடுத்தாலும் வாங்கமாட்டாள். என் மகட்கு, பாலிலே மெல்லப் பழம் நழுவி வீழ்ந்த விதம்போல வந்து வாய்த்தீர் புலவரே! நீலியொரு பேய்ப்பிள்ளையைப் பெற்றேன்; பெண்ணும் நீங்களும் மாப்பிள்ளையும் பெண்ணுமாய் வாழ்ந்திருங்கள். அடி மதனுபிஷேகம்! மாப்பிள்ளைக்கு நித்திரைக்கு நெடுநேரமாகிறது. போ, என் தத்தை மொழியாளே!" என்று மூச்சுவிடாமல் பேசி முடிக்கிருள். முடித்துவிட்டுப் போகிருள்; தோழிகளும் போகிருர்கள். செம்பவள வாயினள், "வீட்டுக்குள் வாரும்" என்கிருள்.

அவள் முன்னல் புக, பாவிப் பார்ப்பான் பின்னல் போகிருன். அடடா! என்ன அருமையான பள்ளியறை! இந்தப் பள்ளியறையிலே இவளோடு இருப்பதைத்தான் உலகத்தில் புரியாதவர்கள், "தேவசுகம்" என்று அழைக்கிருர்கள்! பட்டாலே மெத்தை; அதன்மேல் பவள மல்லிப் பூக்கள்; அதன்மேல் ஒரு பட்டாடை! கட்டில் "வா வா!" என்று அழைக்கிறது. மல்லிகைப் பூ வாசம் 'கம்'மென்று அடிக்கிறது. ஊதுபத்தி ஒரு பக்கம் மணம் பரப்புகிறது! சுவற்றிலே காமலீலைச் சித்திரங்கள் கண்ணைக் கவர்ந்து கருத்தைக் கெடுத்து வெறியேற்றுகின்றன! பால் இருக்கிறது; பழம் இருக்கிறது! இந்தப் பழந் தின்று, பால் குடித்து...அடடா! அங்கேயே நினைவு போய்விடுகிறது ஐயருக்கு! உடனே மாமி பல வரிசைகளை அறைக்குள், தோழிப் பெண்கள் மூலம் அனுப்பி வைக்கிருள்.

…………நல்ல தங்கத்
தட்டிலே பாக்கு வெள்ளிலைபோற்
பெட்டியிலே மல்லிகைப்பூச் சீப்பு
—வெட்டிவேர்
தந்தச் சிமிழிற் சவாது
குர்ணுப்பட்டை தனிற்
கெந்தப்பொடி பவளக்
கிண்ணத்திற்—சந்தனங்கள்
கூறுங்கிளிமொழியைக்
கூடின் விடாயாறித்
தேறும்பொழுதிலுண்ணச்
சிற்றுண்டி—வேறுசில
பீங்கானிற் பன்னீர்;
பிடிசொம்பிலே வெந்நீர்
தேங்காய்த் தனத்தார்
சிலபேர்கொண்டு—ஆங்குவந்து
மாமி வரவிட்ட வரிசையென்று
வைத்துநின்ருர்………
……………………………………

—உடன் மதனுபிஷேகம் அவர்களைக் கண்காட்டி அனுப்பி விட்டு,

வாசற் கதவடைத்தாள்; மங்கை
நல்லார் போனதற்பின்
பேசிக் குனுலமிட்டுப்
பேதைபோற்—கூசி
மதிவதனம் காட்டி
வளைதிருத்தி நின்ருள்
புதிய மணவறைப் பெண்போல்
—மதனுபி
ஷேகமே; என் பிராண
ஸ்நேகிதியே! தாங்காதென்
மோகமே என்றவளை
முந்திபிடித்து—ஏக
சயனத்து இருத்தி
முகந்தன்னில் முகம்சேர்த்து
நயனத்தில் வைத்தேன் நயனம்
—தயவுவரப்
பேசி மலர்மல்லிகை வேர்ப்பிச்சி
முடித்துக் கலவை
பூசிச் சவ்வாது புனுகணிந்து
—நேசம்
பிடிக்கக் கொடுத்தாள்;
பிளவுதாம் பூலம்
மடித்துக் கொடுத்தாள்;
தன்வாயாற்—கடித்துக்
கொடுத்தாள்; சிலசருளை!
கொஞ்சிமடி மீதிற்
படுத்தாள்; புளகம்
படைத்தேன்—எடுத்தணைத்து
……………………

இப்படி ஆரம்பமான காம விளையாட்டு பற்றி, பக்கம் பக்கமாக வர்ணிக்கிருன் கவி. அதையெல்லாம் சொல்ல ஆரம்பித்தால் மரியாதை கெட்டுப் போகும்! சுருக்கமாக அவன் முடித்ததுபோல், "நடந்த கலவி சொல்ல நாலு நாள் செல்லும்!" ஆமாம்! ரொம்ப மோசம் போங்கள்!

"மங்கை நல்லாள், மண்டபத்தில்
மன்மதக் கூத்து
ஆடியதுபோல் அங்குமொரு
கூத்துஆடிஞள்!"

என்கிருன் கவி! பிறகு இருவரும் கதவு திறந்து வெளிச் செல்லுகிருர்கள். அதைப்பற்றிக் கவி சொல்லும்போது, "மோகினியின் பின்செல்லும் முனிவன் போல்" அவன் சென்ருன் என்கிருன். சென்று திரும்பியதும், அந்த மங்கையின் தோளில் கை போட்டு நின்றபடி, பார்ப்பான் படுக்கையைப் பார்க்கிருன். அங்கே, கைவளையல்கள் ஒரு பக்கம் நெறிந்துச் சிந்திக் கிடக்கின்றன; தலையிலிருந்து விழுந்த மலர்க்கொத்து வதங்கிக் கிடக்கிறது. காதிலிருந்த பொன்னோலை ஒன்று கழன்று விழுந்துகிடக்கிறது. முத்துமாலை அறுந்ததில் முத்துக்கள் சிதறிக் கிடக்கின்றன. பவளங்கள் கிடக்கின்றன. அதைப் பார்த்தபடியே மதனுபிஷேகம் மலரணையில் சாய்கிருள், களைப்போடு. பார்ப்பான் அவள் மடியில் படுத்துக்கொள்கிருன்.

உடனே அவள், தன் கைகளை அவன் நெற்றியில் சுற்றி திருஷ்டி கழிக்கிருள் என்கிருன் கவி. "கற்ற தொழில் காட்டிவிட்டீர்! என் கண்பட்டு திருஷ்டி வந்திருக்கும்! இங்கு பலவீனர்கள்தான் வருகிருர்கள். அவர்கள், "தன் போகம் முந்தவிட்டுத் தவிப்பவரே யல்லாமல்" என்போகம் முந்துவிப்பார் இல்லை! அன்பரே! ஆண்களெல்லாம் உம்மைப்போல் ஆண்களாவரோ! முருங்கைத் தூண்களெல்லாம் நல்ல வைரத் தூணுகுமோ!" என்று புகழ்கிருள். (இந்த அடிகளில்தான் சில இடங்களில் கவி முரண்படுகிருன். தாய்க்கிழவி, "மகள், யாரையும் பார்த்ததில்லை இதுவரைக்கும்!" என்கிருள், மகளோ, "வந்தவர்களில் நீர் சமர்த்தர்" என்கிருள். கவி, இதை நயத்துக்காகக் கையாண்டிருக்கிருன் என்ருலும், முரண்பாடு சுவையைக் கெடுக்கிறது.)

"இனி ஒருத்தர் முகத்தையும் பாரேன். எனக்குப் பள்ளியறை மாப்பிள்ளை நீரே!" என்று கூறிவிட்டு, அவனது களைப்புத் தீர்க்க கனி கொடுக்கிருள். அதை, "காரானைக்கு ஊட்டும் கவளம்போல்" பெரிய கனி என்கிருன் கவி. அதாவது யானைக் களைப்பு ஏற்பட்டுவிட்டதாம், அவனுக்கு! அதற்குப் பிறகு என்னென்னவோ………

பொழுது விடிகிறது.

பார்ப்பான், அலுத்த மேனியைத் தூக்கிக் கொண்டு எழுந்திருக்கிருன். உடம்பிலே ஊஞ்சலாடிக்கொண்டிருந்த பூணூலைப் பார்க்கிருன். அட! இது வெறும் நூல் பூணூல் தானே! இது எப்படித் தங்கமாயிற்று! என்று ஆச்சரியப்படுகிருன். அதாவது, அவளது மேனியைக் கட்டித் தழுவும் போது, அவள் மேனியில் இருந்த மஞ்சள் பட்டு, "வெண் பூணூல், பொன் பூணூல்" ஆய்விட்டதாம்! சண்டாளக் கவி, இந்த உவமையில் தான் நன்ருக அனுபவித்திருக்கிருன்.

பூணூலைப் பார்த்தபடி பார்ப்பான் குளிக்கச் செல்கிருன். வையை நதியில் இறங்கு முன், அவன் பல் விளக்குவதற்காக நாயுருவி பிடுங்கப் போய், தவறி குப்பை மேனியைப் பிடுங்கி பல் விளக்குகிருன்: மந்திர தர்ப்பணத்தை மறந்து விட்டு கலவிக் கதையை நினைத்து ஜெபிக்கிருன்; காயத்திரி ஜபத்தை மறந்து விட்டான் — காரணம் மாய ஸ்திரீ ஞாபகம்! குளித்துக்கொண்டிருக்கும்போது மேல் போட்டிருந்த துண்டு வையை நதியிலேயே போய் விடுகிறது! எல்லாம் காம மயக்கம் ஐயா! காம மயக்கம்!

எழுத்தாளரானர்!

ஒரு பந்து விளையாட்டுப் போட்டியைப் பற்றி வந்த கட்டுரையின் கையெழுத்துப் பிரதியை அச்சுக் கோர்ப்பதற்காக அவன் பிரித்தான் காற்று 'விர்' என்று அடித்தது. முதல் இரண்டு தாள்களைத் தவிர, மீதியெல்லாம் ஜன்னல் வழியே மாயமாய்ப் பறந்துபோயின. பார்த்தான் தொழிலாளி. அவன் பார்த்த அதே விளையாட்டுத்தானே இது; தனது சொந்த மனோரதத்தை செலுத்தினன். தனது கற்பனைக்குப் பட்டவாறு கட்டுரையை ஒரு தினுசாய் சிருஷ்டித்து, பூர்த்திசெய்து, கோத்து முடித்தான். கட்டுரையும் மறுநாள் பத்திரிகையில் அப்படியே வெளிவந்துவிட்டது. அருமையான கட்டுரை என்று எல்லாரும் புகழ்ந்தார்கள். ஆனல் அசல் கட்டுரையாளர் மட்டில் வந்து, "இது என்னுடையதல்ல; திருத்தம் போடுங்கள்" என்று கூச்சலிட்டார். அப்போதுதான் ஆசிரியருக்கு விஷயம் புரிந்தது. தொழிலாளிக்குச் சன்மானம் கிடைத்தது; அதோடு அதே பத்திரிகையில் நிருபர் உத்தியோகமும் கிடைத்தது. இது கட்டுக் கதையல்ல. அந்தத் தொழிலாளிதான் இன்று நியூயார்க் 'ஸன்' பத்திரிகையில், தமாஷ் குறிப்புகள் எழுதும் பாப் டேவிஸ் என்ற பிரபல எழுத்தாளர் தம் வாழ்க்கையை, எழுத்து உலகத்துக்குத் திருப்பிய இந்தச் சம்பவத்தை அவரே இப்போது கூறியுள்ளார்.

இப்படியாக அவதானி என்னும் அந்தப் பார்ப்பனன், மதனு பிஷேகத்தின் மேல் மையல் கொண்டு அங்கேயே தங்கிவிடுகிருன். தாயும் மகளும், அது இது என்று அவன் பணத்தைப் பிடுங்குகிருர்கள். கடைசியாக அவனை, தாயும் மகளும் துரத்துகிருர்கள். அவதானி, அந்தத் தாய்க் கிழவியோடு குஸ்தி போடுகிருன்.

பிறகு சபையோர் விசாரணை நடத்துகிருர்கள், தாய்க் கிழவி ஒப்பாரி வைக்கிருள். "ஐயா! சபையோர்களே! இந்தப் பார்ப்பான் என் மகளைப் படாதபாடு படுத்தி விட்டான். காலணு கொடுக்கவில்லை. அல்லும் பகலும், அடைத்த கதவைத் திறக்கமாட்டான். மெல்லியலைச் சற்றும் வெளியில் விடான். என்ன சொல்ல! பொன் கொடுப்பானென்று நம்பினேன். என் மகளுக்கு புண் கொடுத்து விட்டான். மகள் குரங்கு போல் ஆய்விட்டாள்! ஐயோ! எத்தனை பேர் வந்தார்கள்! அத்தனைபேரும், "அங்கிருந்த குடுமித் தலையைக் கண்டு" அகன்று விட்டார்கள் இவன் என் மகளை என்ன, என்னைக் கூட சாடையாக கவனித்தான்; நான் பயந்து ஒதுங்கி விட்டேன்! படுபாவிப் பயல்! பட்டி மகன்! என்ன பொடிபோட்டானே; என் மகளை மயக்கி விட்டான்!" என்று அழுகிருள்; நீலிக் கண்ணீர் வடிக்கிருள். பார்ப்பானும் நடந்ததைச் சொல்லுகிருன். கடைசியாக சபையோர், "ஐயரே! உண்மை உமது பக்கம் இருந்தாலும், இனி தாசியிடம் கொடுத்த பணத்தை திரும்பப் பெற முடியாது. யானை வாய்க் கரும்பும், பாம்பின் வாய்த் தேரையும் மீள்வதில்லை. பார்ப்பானுக்கு தாசி நேசம் கூடாது! சரி, நடந்தது நடந்து விட்டது; பேசாமல் ஊர்போய்ச் சேரும்!" என்று உபதேசிக்கிருர்கள். அவனும் 'சரி' என்று செல்லும்போது, ஒரு மண்டபத்தைக் கண்டு,

"சண்டாளிக் கிட்ட தனத்தை
யெல்லாம் இப்படியோர்
மண்டபத்தைக் கட்டித்தான்
வைத்தோமா!

என்று வருந்தியபடி ஊர் போய்ச் சேருகிருன். பிறகு தான் விறலியைத் தூதுவிடுகிருன்; மனைவியான மட்டார் குழலியொடு சேர்கிருன். இந்தக் காவியம் தமிழில் உள்ள தூது, மடல், பிரபந்தங்களில் சுவையானது. மொத்தம் ஆயிரத்து நூற்று நாற்பத்து நான்கு கலிவெண்பா அடிகளால் ஆனது.

இது போக, இன்னெரு கவி காதல் மழைபொழிகிருன் — அவனை அடுத்துப் பார்ப்போம் ✱

சென்ற இதழ் தொடர்ச்சி :

கட்டபொம்மன்

மார்க்ஸ்: விளக்கமாக ஏட்டில் விலாசமிட்டுத் தரல் வேண்டும். சாட்சியாக உமது சகாக்கள் சம்மதமிட்டுத் தரல்வேண்டும்.

நவாப்: ஏட்டில் எழுதிக் கை நாட்டித்தான் தரவேண்டுமோ?

மார்க்ஸ்: ஆமாம்! ஏமாளிகள் அல்லர் வெள்ளையர். எச்சரிக்கையாகத்தான் எதையும் எப்பொழுதும் செய்வார்கள். இல்லையென்றல் வணிகத்திற்காக வந்த.........

நவாப்; உங்களிடம் ஊராளும் வேந்தன்........இம்.......உங்களை நாடி வந்திருப்பேனு?

மார்க்ஸ்: (கோபத்துடன்) நவாப்...ஏட்டில் கையெழுத்திட...

நவாப்; மாட்டேன் என்ற கூற நான் என்ன மடையனு....? ஆனல்........

மார்க்ஸ்: ஆனல் என்ன...?

நவாப்: அவர்களை அடக்கி அடிமைகளாக்கி எம் அடிபணிய வைக்க வேண்டும்.......

மார்க்ஸ்: அதற்கென்றே வந்திருக்கும் எங்களிடம் அதிகம் சொல்லத் தேவையில்லை. பத்திரத்தைப் படித்துப் பாரும். குறையிருந்தால் இடையில் முறையிடாதீர். இறுதியில் முறையிடலாம்.

[நவாப் பத்திரத்தை வாங்கிப் படித்துப் பார்க்கிருர்.]

மார்க்ஸ்: சந்தேகம் ஏதாவது.......

நவாப்; இல்லை....சந்தேகம் ஒன்றும் இல்லை. (முணங்கிக் கொண்டே கையெழுத்திடல்)

மார்க்ஸ்: (ஆலன் துரையைப் பார்த்து) ஆலன்! ஆற்காட்டு நவாப் அதிகாரத்தை ஒப்படைத்து விட்டார். அவர் அரசர் ஆவதற்கு முன்னல் சிறிது காலம் அவகாசம் கொடுத்து அடக்கு முறைச் சிறையில் அடைத்துப் போடும். (ஏளனச் சிரிப்பு—கைகளில் விலங்கிடல்)....நிறுத்து...! இருப்பு விலங்குகளை இவர் கரங்கள் ஏற்றுக் கொள்ளாதப்பா! ஏற்றுக்கொள்ளாது........தங்க விலங்கு களைத் தரம் அறிந்து கொடுத்தவருக்கு இருப்பு விலங்கா ஏற்றதாக இருக்கும்?.......வேண்டாம்........விட்டுவிட்டால் போதும், அந்த வேந்தர் பூபதியை...

நவாப்: அடபாவிகளா....? பாளையக்காரர்கள் எவ்வளவோ பரவாயில்லையே......சாட்சிக்காரன் காலில் வீழ்வதை விட சண்டைக்காரன் காலில் விழ்ந்திருந்தால்......

மார்க்ஸ்: நவாப்! இன்ருவது உம்மால் அதை உணர முடிந்ததே. நன்ருக உணர்ந்து கொள்ளும்.

நவாப்: வெள்ளையனே, அதிகாரத்தை அறிந்த என்னிடமே உன் அழிவு வேலை ஆரம்பமா? உதவியை நாடி வந்த என்னிடம் பதவியைப் பிடுங்கிக்கொண்டு என்னைப் பாழ்படுத்த எண்ணிப் பாதகச் செயல் புரிந்து விட்டாயே. நாடி வந்த என்னை நலிய வைத்துச் சாடப்பார்த்த நாசகாரனே! சொந்த நாட்டானைத் துரத்த எண்ணி அன்னிய நாட்டானிடம் ஆட்சியை ஒப்புவித்த எனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்.

மார்க்ஸ்: ஆற்காட்டு நவாப்....வேண்டியதைத் தான் விரும்பிச் செய்கிறோம். இதுதான் ஆங்கிலேயனின் ஆரம்ப வேலை. (ஆலனைப் பார்த்து) ஆலன்....ஆற்காட்டு நவாப்பை என் முன் அதிக நேரம் நிறுத்தாதே. அன்பு முற்றி ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அடிப்படை அழிந்து விடப்போகிறது. கொண்டுபோ.......ஆலன்... கொண்டு போ......

[ஆற்காட்டு நவாப்பை இழுத்துச் செல்லுகின்ருன்]

அன்று இராபர்ட் கிளைவால் திட்டப்பெற்ற ஆங்கில ஏகாதிபத்தியத் திட்டம் இன்று ஆரம்பமாகிறது. இந்திய நாட்டை அடிமைப்படுத்த எண்ணிய இராபர்ட் கிளைவின் எண்ணங்கள் இனித்தான் ஈடேறப்போகின்றன. வெள்ளையர்கள் இந்நாட்டின் வியாபாரிகளல்லர்...இந்தியாவின் ஏகாதிபத்திய சக்கரவர்த்திகள். ஆம், இந்நாட்டின் சக்கரவர்த்திகள்தான்.

[சிரிக்கின்ருன். அம்பொன்று விழ்கின்றது. எடுத்துப் பார்க்கிருன் மார்க்ஸ்.]

"வெள்ளையனே வெளியேறு"....வீரபாண்டியன் கட்டபொம்மன்.

மார்க்ஸ்: யாரவன்.........?

—சிலம்பீன்செல்வன்

(தொடரும்)

மற்ற சரக்குகளை ஆர்டர் பண்ணித் தருவித்துக் கொண்டது போல் தமக்கு வேண்டிய மனைவியையும் ஆர்டர் பண்ணித்தருவித்துக் கொண்டார் ஒரு வியாபாரி.

பார்ஸலில் வந்த மனைவி

ஜமைக்கா தீவில், ஒரு வியாபாரி இருந்தார். அவர் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைத்து ஒரு மனைவி தேவை என்று லண்டனிலுள்ள தம் ஏஜெண்டுக்கு ஒரு ஆர்டர் கொடுத்தார்.

"விவரம்: நான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன். இங்கே எனக்குத் தகுந்த பெண் கிடைக்கவில்லை. அதனல் அடுத்த கப்பலில் சுமாரான உயரமுள்ள, நல்ல கட்டுமஸ்தான பெண்ணை அனுப்பி வைக்கவும். அவள் முகம் சுமுகமாக இருக்கவேண்டும்; குணத்தில் சாதுவாகவும் நடத்தையில் களங்கமின்றியும், இங்குள்ள சீதோஷ்ண ஸ்திதியைத் தாங்கிக்கொள்ளும் சக்தியும் உள்ள பெண்ணுக இருக்க வேண்டும்."

லண்டன் ஏஜெண்ட் பல இடங்களிலும் தேடி, கடைசியில் கௌரமான ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைப் பிடித்தார்.

தன்னுடன் ஏஜெண்டு கொடுத்த சர்டிபிகேட்டையும் கொண்டு ஜமைக்காவுக்குச் சென்ருள் பெண்.

விவரம்: ஆர்டர்படிக்கு நல்ல ரகமாகவும், ரூபலக்ஷணமாகவும், நல்ல நிலைமையிலும் உள்ள 21 வயதுப் பெண் அனுப்பப்பட்டிருக்கிறது. —ஏஜெண்ட்"

அத்துடன் பாதிரியாரிடம் நன்னடத்தைப் பத்திரமும், பக்கத்து வீட்டாரிடம் அதை ஊர்ஜிதம் செய்யும் கையெழுத்துக்களும் வாங்கிக் கையோடு கொடுத்தனுப்பி யிருந்தார் ஏஜெண்ட். அவளுடைய தேகநிலை நன்ருக இருக்கிறது என்பதற்கு நான்கு பெரிய டாக்டர்களும் சேர்ந்து சர்டிபிகட் கொடுத்திருந்தார்கள்.

கப்பலில் வந்து இறங்கினுள் பெண். வியாபாரியும் நேரில் வந்து வரவேற்ருர். அவரிடம் "ஐயா, என்னிடம் தங்களுக்கு ஒரு பில் கொடுத்து அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்குரிய பணத்தைக் கட்டிவிடுங்கள்" என்று சொன்னுள். மேலும் ஏஜெண்ட் கொடுத்தனுப்பியிருந்த கடிதத்தைக் காட்டினுள். அதன் மறுபுறத்தில் "இந்தக் கடிதம் கொண்டுவரும் நபர்தான் நாங்கள் தங்களுக்காக ஆர்டர் பண்ணிய மனைவி" என்று எழுதியிருந்தது.

வியாபாரியும் பில்லுக்குரிய பணத்தைக் கட்டி மனைவியை எடுத்துக்கொண்டார்.

சென்ற இதழ் வரை தென்னவர் எப்படி வாழ்ந்தனர், எப்படிச் சாய்ந்தனர், என்பது பற்றிக் கூறினேன். இந்த இதழில், "சாய்ந்த பின் நாட்டு நிலை" பற்றிச் சிறிது கூறி, ஈரோட்டில் தோன்றிய ஒளி, தென் இந்திய நல உரிமைச் சங்கம் கண்டது வரை கூறியிருக்கிறேன். அதன் பின் அண்ணுவின் பிரவேசம், தீவிரப் போக்கு, கழகமாக மாறியது, புதுமைக் கழகம் பிறந்தது....எனப் போகும் இது

இந்தப் பகுதியை ஏராளமான தோழர்கள் விரும்பிப் படிப்பது, வரும் கடிதங்களிலிருந்து தெரிகிறது. நீண்ட காலம் தொடர்ந்து பெருங்காவியமாக வரைய வேண்டுமென்று எல்லோரும் கூறுகிறூர்கள். அந்த ஆசை எனக்கும் இருக்கிறது.

ஒளிதுரத்தி இருள் வர, மேதினி
உறங்கி வீழ்தல் போற்றமிழ்த் தாயகம்
இழிவிருட்குகை சேர்ந்ததாம்; வீரர்கள்
எலி மனத்தினராயினர்! ஆரியம்
குழிபறித்து நற்றழை கொடுமூடவும்,
குப்புறத்தமிழ் மாநிலம் வீழ்ந்ததாம்!
பழிபிறந்து நற்புகழ் அழிந்து, தென்
பாங்கு யாவிலும் தீங்கினம் சேர்ந்ததாம்!

* * *

ஒன்றிரண்டல! பன்னூற்ருண்டுகள்
உணர்விழந்து கிடந்தனர் தென்னவர்!
கன்றும் ஆவும் கடும்பகையான போல்
காரும் நீரும் வேறுவேருன போல்
வென்றி வீரரும் மின்னிடும் வாட்களும்
வேறுபட்டு மெய்தூசு படிந்தபோல்
ஒன்றி வாழ்ந்தவர் ஒற்றுமை தீர்ந்தனர்!
ஒவ்வொருள்ளிலும் உணர்வுகள் மாறின!

* * *

கரிபருத்தது; ஆயினும் சிறுபடக்
கரிய நாகவிஷம்படச் சாய்தல்போல்
வலிமிகுந்தவர், சூழ்ச்சியில் வீழ்ந்தனர்!
வஞ்சநெஞ்சினர் சோலையில் ஆடினர்
மறுபடிக்கும் சொல்வதென்? திராவிடம்
மாண்டு, வந்தவர் ஆரிய நாடென
எழுதிவைத்தனர்! ஏற்று 'ஆம்' சொலும்
இளித்தவாயர்கள் இன்றும் இங்குள்ளனர்!

* * *

ஆரியக் கொலைகாரர்கள் ஓர்புறம்,
அள்ளிஓடும் வடவர்கள் ஓர்புறம்
காரியத்தில்கண்ணெடு வாழ்ந்து, தம்
கைப் புறத்திற் பொருட்குவை சேர்க்கவும்
வந்தவர்க்கெலாம் வாழ்வளித்து, தன்
வாழ்விற்றென்னவன் ஆண்டியாயினன்!
இந்தத் தீமை பொறுப்பதில்லை யென்(று)
எழுந்தது காண்க ஈரோட்டில் ஓர் செங்கதிர்!

தங்க வண்ணமேனியும், புன்னகை
தாங்கும் இன்ப வதனமும், கண்களில்
பொங்கும் வீரப் போர்ப்புலிப் பார்வையும்
"புவனம் யாவையும் தன் வயமாக்கிடும்
எங்கள் தந்தை!" யென்றின்பத் திராவிடம்
ஏற்ற வந்த நம் ஈரோட்டண்ணலை
இங்கு வாழும் இழிந்த போக்கினர்
எண்ணி எண்ணி இளைக்கலுற்ருரரோ!

* * *

மேடையேறி நின்றிடில் ஓர் எழில்
மெய்சிலிர்க்கப் பேசிடில் ஓர் எழில்
தாடை தாங்கும் தாடி அசைந்திடில்
தனிப்பெரும் எழில்! கருநிறத்தமிழ்
ஆடை காற்றில் அசைந்திடில் ஓர் எழில்
அடி எடுத்து நடந்திடில் ஓர் எழில்
ஈடிலாத நம் ஈ. வே. ராவினுக்(கு)
இது புறத்தெழில்! என்னில் உள்ளமோ........

* * *

"எனது தாயகம்! எனது தோழர்கள்
எனது தாய்மொழி! எனது சோதரர்
என்பதே நினைவான உள்ளமாம்
இமையும் மூச்சிலும் இந்த வெள்ளமாம்!
கனவு போலப்போன சரித்திரக்
காட்சியாவையும் காட்டி ஈண்டுளோர்
நினைவைமாற்றி, நிலை விளக்கிய
நேர் மொழித்தமிழ் வீரராம் அவர்!

* * *

தூங்கினேர்தமைத் தட்டி எழுப்பியும்,
சோம்பல் நெஞ்சினைச் சுறுசுறுப்பாக்கியும்
பாங்கு காட்டியும் பண்பை ஊட்டியும்
பாதை மாறிய வேதனை கூறியும்
"தீங்கு நீக்கிடத் தினவு கொண்டெழு
தீரனே" என வீரம் ஊட்டியும்
ஈங்குளோர் மனம் எழுச்சி கொள்ளத்—தென்
இந்திய நலச் சங்கம் கண்டனர்!

மாஸ்கோவா?

பன்மொழிப் புலவர்
கா. அப்பாத்துரை,
எம். ஏ; எல். டி., (விசாரத்)

மாஸ்கோவா, காஞ்சீபுரமா என்ற கேள்வி குறிக்கோள் பற்றி எழுந்த, எழத்தக்க கேள்வி அல்ல. ஏனென்றால் அவை ஒன்றுபட்ட குறிக்கோள் என்ற பாசக் கயிற்றில் இணைந்தவை. மாஸ்கோவின் துகிற்கொடியைக் காஞ்சீபுரம் ஏந்தவில்லை. ஆனால் அது மாஸ்கோவின் புகழ்க் கொடிக்கு மாண்பூட்டும் மற்றொரு புகழ்க் கொடியைத் திராவிட மண்ணில் நாட்டிப் பறக்கவிடப் பாடுபடுகிறது. மாநிலத்தை, மாஸ்கோவுடன் தோழமை கொண்ட ஒரு புதிய பொன்னுடாக ஆக்கவே, காஞ்சீபுரப் பாதை வகுத்த அறிவுத் தளபதி அண்ணாவும், அவர் தம் பகுத்தறிவுப் படையும், அல்லும் பகலும், அயராது போராடி வருகின்றனர்.

மாஸ்கோவா, காஞ்சீபுரமா என்ற கேள்வி, நெறி முறை பற்றியும் எழத்தேவையில்லை. ஏனென்றால் நெறி முறையும் திட்டமும் நாட்டுக்கு நாடு, காலத்துக்குக் காலம், சூழ்நிலைக்குச் சூழ்நிலை மாறுபடும் இயல்புடையவை; மாறியே தீரும். இதை மாஸ்கோ அறியும். மாநிலத்துக்கும் இது புரியும். மாஸ்கோவையும் புரிந்து கொள்ளாமல், மாநிலத்தையும் தெரிந்து கொள்ளாமலிருப்பவர்கள்தான் இதைக் காணுமலிருக்க முடியும். மேலும் இம்மாறுபாடுகள், வேண்டுமென்றே, வேறுபடுத்திக் காட்டுவதற்காகச் செய்யப்படுபவை அல்ல. வரலாறு, பிற நாடுகளின் அனுபவங்கள், கால, இட சூழல்கள் ஆகியவற்றைப் பற்றிய அறிவாராய்ச்சியே இவ் வேறுபாடுகளை உண்டு பண்ணக் காரணமாய் இருப்பவை.

மாஸ்கோவா, காஞ்சீபுரமா என்ற கேள்வி நேற்று எழவில்லை; நாளை எழமாட்டாது. இத்தகைய ஒரு கேள்வி கேட்கப்பட்டது என்பதையே மக்கள் விரைவில் மறந்து விடுவார்கள். ஆனால் எப்படியோ இந்தக் கேள்வி இப்போது தமிழன் முன் எழுப்பப்படுகிறது. மாஸ்கோ அன்பர்களும் இதைக் கேட்க முடியாது. தமிழகத்தில் பற்றுடையவர் உள்ளத்திலும் இது எழாது. ஏனென்றால், மாஸ்கோ இருப்பது ரஷ்யாவில்! காஞ்சீபுரம் இருப்பது தமிழகத்தில்! இதை அவர்கள் மறந்து விட மாட்டார்கள்.

இந்தக் கேள்வி மாஸ்கோவை அடுத்து இருப்பவர்கள் கேட்கும் கேள்வியல்ல; தமிழகத்தை அடுத்து இருப்பவர்கள் கேட்கும் கேள்வியுமல்ல; இரண்டுக்கும் இடைப்பட்டு, டில்லியிலிருந்து, டில்லியின் பாசத்துடன் மாஸ்கோவின் நேசத்தை இணைந்துக் கொண்டவர்களிடமிருந்தே இந்தக் கேள்வி எழுப்பப்படுகிறது.

டில்லியின் பாசத்துக்கு ஆளான கட்சிகள் நம் நாட்டில் சில இன்னும் இருக்கின்றன. ஆனால் அந்தப் பாசத்துக்கு நேரடியான உரிமையுடைய கட்சி டில்லியிலிருந்து ஆளும் கட்சி—அதாவது காங்கிரஸ் கட்சி ஒன்றுதான். அது முற்போக்கான கருத்துடைய பலரால் பிற்போக்குக் கட்சி — பெரும் பணம் படைத்த முதலாளிகளின் கட்சி— என்றுதான் குறிக்கப்படுகிறது. ஆயினும் மொழிவழி நாட்டுப் பிரிவினை, ஜமீன்தாரி—இனும்தாரி ஒழிப்பு— தீண்டாமை ஒழிப்பு, வகுப்பு நீதி முதலிய உயிர் நிலைப் பிரச்சனைகள் எழும்போது, அந்தக் கட்சியின் அணிவகுப்பில் ஒரு பிளவு—நிலையான பிளவு அல்லாவிட்டாலும், ஒரு தற்காலிகப் பிரிவினை ஏற்படுவதைக் காண்கிறோம், ஆட்சியாளரும், அவர்களுடன் சேர்ந்த ஒரு சில உயர் பதவியாளர்களும், பண மூட்டைகளும் மட்டுமே அப்போது டில்லியின் பாசத்துக்குக் கை கொடுக்கிறார்கள். ஆனால் கட்சியாகிய காங்கிரசையே உள்ளிருந்து ஆட்டிப் படைக்கும் முதலாளித்துவ—ஏகாதிபத்தியவாதிகளாக அவர்கள் காட்சியளிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு எதிராக, காங்கிரசுக்குள்ளேயே ஒரு மக்கள் பேரணி காங்கிரசுக்காகத் தொண்டாற்றிய தொண்டர்கள், தேச விடுதலைக்காகப் போராடிய தியாகிகள், மக்கட் பற்றாளர்கள், ஆகியவர்களைக் கொண்ட ஒரு படை தற்காலிகமாகத் திரளுவதைக் காண்கிறோம். அவர்கள் பிற்போக்குக் காங்கிரஸ் கட்டடத்தைத் தெரிந்தோ தெரியாமலோ, ஆதரித்தாலும், அது சரியாமல் தங்கள் உழைப்பாலும் ஆதரவாலும் அதைக் காத்து நின்றாலும், தங்கள் சிந்தனையை உயிர் நிலையான கட்டங்களிலாவது முற்றிலும் பறி கொடுக்காமல், முற்போக்கணியில் இடம் பெற முனைகிறார்கள்.

ஆனால் காங்கிரசை பிற்போக்குக் கட்சி என்று தூற்றும் மாஸ்கோ வாதிகளிடையே நாம் காண்பது என்ன? மார்க்கிசம் பேசி அவர்கள் திராவிட நாட்டுக் கோரிக்கையைக் கேலி செய்கிறார்கள். அதே சமயம் ஸ்டாலினிசத்தைத் துணைக் கொண்டு அதைச் சாக்கிட்டு, டில்லித் தேசியத்தை ஏற்று அணைத்துக் கொள்கிறார்கள். அதுமட்டுமல்ல. டில்லி ஏகாதிபத்தியத்திடம் அவர்கள் கொண்டிருக்கும் பாசம் பெரும்பாலான காங்கிரசுவாதிகளைக் கூடத் தோற்கடித்துவிடும் போலிருக்கிறது! முற்போக்கு என்று கூறிக் கொண்டே, காங்கிரஸின் கோட்டைக்குள்ளே முற்போக்கு எண்ணம் படைத்தவர்கள் பெருகுவதைத் தடுக்க, வெளியே ஒரு பிற்போக்கு அணை போட்டு, பிற்போக்கு ஏகாதிபத்திய இணைப்பை வலுப்படுத்த முயலுகிறார்கள். காங்கிரசிலுள்ள முற்போக்குச் சக்திகளை ஊக்குவதற்கு மாறாக, அதன் பிற்போக்கு அரணுக்கு மறைமுகமான வலுத் தேடுகின்றனர்.

மாஸ்கோவா, காஞ்சீபுரமா என்ற வினாவிலுள்ள மாறாட்டம்—புதிர்—இதுதான் டில்லி ஏகாதிபத்யத்துக்கு நேரடியான ஆதரவு திரட்டுகிறது காங்கிரஸ் மேலிடம். அது டில்லியின் பேராலேயே ஆதரவு தேடுகிறது. ஆனால் மக்களிடையே அப்பெயர் மனக்கசப்பைத்தான் ஊட்டி வருகிறது. இதை அறிந்த சில பிற்போக்காளர்கள் முற்போக்குக் கோட்டையிலேயே டில்லிக்கு வலுத் தேடுகின்றனர் –மாஸ்கோ கொடியை ஏற்றி! வெறுப்புக்காளாய்விட்ட டில்லிக்கு, மக்கள் உள்ளத்தில் இடம் பெற்றுவிட்ட மாஸ்கோவின் பூச்சை ஏற்றி, மாஸ்கோவின் பெயரால் டில்லிக்கு வலுத்தேடுகின்றனர்.

மாஸ்கோவின் புனித நிழல்கள் என்று தம்மை விளம்பரப் படுத்திக் கொள்பவர்கள் தம்மை முற்போக்கு வாதிகள் என்றும், இடதுசாரிகள் என்றும் பெருமையாகக் கூறிக் கொள்கின்றனர். அது பற்றி நமக்கு மகிழ்ச்சியே. மாஸ்கோவின் குறிக்கோளை ஆதரிப்பவர்கள் இடது சாரிகள்தான் என்பதிலும் நமக்கு ஐயம் இருந்ததில்லை. ஆனால் மாஸ்கோ பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் மட்டும் இடதுசாரியாய் இல்லை. சமூக, சமயத் துறையிலும் அது தீவிர இடதுசாரிக் கருத்துக்களைக் கொண்டே புரட்சி செய்தது. போல்ஷெவிஸ்டுகள் புரட்சி செய்து ஒழித்தது ஜார் அரசனையும் அவன் பணக்காரக் கும்பல்களையும் மட்டுமல்ல. அவர்களுக்குப் பக்க மேளம் கொட்டி, அவர்கள் படை பலத்துடன் தங்கள் மாயத் தெய்வீக பலத்தையும் இணைத்த மதோன்மத்தர்களையும் போல்ஷெவிஸ்டுகள் சாய்க்கத் தயங்கவில்லை. அந்த மத குருமார்கள் மக்களிடையே பரப்பி வந்த மூடக் கருத்துக்களையும் மூடப் பழக்க வழக்கங்களையும் அவற்றின் வளர்ப்புப்பண்ணைகளாயிருந்த சமய நிலையங்களையும், பழைய கல்வி முறைகளையும் ஒழிக்க அவர்கள் பின் வாங்கவில்லை.

திராவிட நாட்டிலும் சரி, அதற்கு வெளியேயும் சரி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இந்த வேலையில் சுண்டுவிரல் கூட அசைக்கவில்லை. அதுமட்டுமல்ல, இத்திசையில் கீழ் நாடுகளில் எங்குமே இல்லாத அளவிலும், முறையிலும் அறிவுப் புரட்சி செய்யும் திராவிட இயக்கத்தை எதிர்த்து, அவர்கள் தங்கள் உண்மை உருவத்தை மக்கள் அறியும்படி காட்டி வருகின்றனர். அவர்கள் உலகின் பிற்போக்குச் சக்திகளை எதிர்க்கின்றனர்—இந்த நாட்டின் பிற்போக்குச் சக்திகளையல்ல. இந்த நாட்டின் குரல்வளையைத் தன் பிடியில் கொண்டுள்ள டில்லி ஏகாதிபத்தியத்தையும் அல்ல. அவர்கள் உலகின் முற்போக்குச் சக்திகளை ஆதரிக்கின்றனர்—இந்தநாட்டின் முற்போக்குச் சக்திகளை அல்ல. இரண்டும் மிக எளிதான போக்கு, ஆதிக்க ஆசையுடையவர்களுக்கு! ஏனென்றால் உலகத்தின் பிற்போக்காளர்களை இந்த நாட்டிலிருந்து கொண்டு எதிர்ப்பதில் அவர்களுக்கு எந்தக் கஷ்ட நஷ்டமும் இல்லை. முற்போக்காளர்கள் என்ற பெயரை வைத்துக் கொண்டே அவர்களுக்கு இந்த நாட்டுப் பிற்போக்காளர்களின் உள்ளார்ந்த மறைமுகமான ஆதரவு கிடைத்துவிடும். அதே சமயம் உலக முற்போக்காளர்களை ஆதரிப்பதனால் அவர்களுக்குக் கட்டாயம் ஆதாயம் உண்டு. அந்தப் பலத்தால் பிற்போக்குக் கட்சிகளின் பிற்போக்கு அரணிலுள்ள ஆட்சியாளரை எதிர்த்தோ, பேரம் செய்தோ அவர்கள் தங்கள் வலிமையைப் பெருக்கிக் கொள்ளலாம்.

'விதையாது அறுவடை செய்யும் கழனி'—இது ஆரியத்துக்கு அறிஞர் அண்ணா தந்துள்ள விளக்கம். 'உழையாமல் உழைப்பின் பயனைச் சுரண்டுபவர் கூட்டம்' —உலகப் பொதுவுடைமைவாதிகள் முதலாளித்துவத்துக்குக் கொடுத்துள்ள விளக்கம் இது. அரசியல் துறையில்

காஞ்சீபுரமா?

இந்த இரண்டு விளக்கங்களுக்கும் முற்றிலும் பொருத்தமான இலக்கியமாகத் தக்கவர்கள் 'மாஸ்கோ'வின் புகழைத் தமது குத்தகையாகக் கொண்ட புரட்சிப் பேச்சாளர்களே!

திராவிட மாநிலத்தில் மட்டுமல்ல, பரந்த பாரத கண்டத்திலேயே, முதல் முதல் பொதுவுடைமைக் கருத்துக்கு நிலத்தைப் பண்படுத்தி, வித்தூன்றி, கல்லடிக்கும் சொல்லடிக்கும் ஆளாகி அதற்கு நீரூற்றி வளர்த்தவர்கள் ஈரோட்டு மரபிலும், காஞ்சீபுர மரபிலும் வந்த தென்னாட்டவரேயாவர். பரந்த கண்டத்தில் தொழிலாளர் இயக்கங்களை உருவாக்கியவர்களும் தென்னாட்டுத் தமிழர்களே. ஆனால் அந்தத் தமிழர் பெயர்கள் கூட இன்று மறக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் விட்டன! அவர்கள் உழைப்பின் அறுவடை வடநாட்டுத் தலைமைக்கு—டில்லி ஏகாதிபத்தியத்தினருக்கே—இருந்து சூத்திரக் கயிற்றை அசைப்பவர்களுக்குச் சென்றுவிட்டது!

எல்லா இடதுசாரிக் கட்சிகளின் தலைமையிடமும் டில்லியில்தான். ஆனால் சென்ற தேர்தலில் இடதுசாரிக்கு —குறிப்பாக மாஸ்கோக் கொடியினருக்கு— வெற்றி கிடைத்த இடம் தென்னாடே. இதற்குக் காரணம் என்ன? திராவிட இயக்கம் இடதுசாரிப் பக்கமாக நாட்டு மக்கள் உள்ளத்தைப் பண்படுத்தி, முற்போக்கு நீர்பாய்ச்சி வந்தது என்பதே. மற்ற இடதுசாரிக் கட்சிகள் பிற நாட்டு இடதுசாரிகளின் கருத்துக்களைத்தான் இந்நாட்டில் பிரசாரம் செய்தன, செய்கின்றன. வலதுசாரிகளுக்குச் சாதகமான பழம் பண்பாட்டை, மூடப் பழக்கவழக்கங்களை அவர்கள் அசைக்கவில்லை. திராவிட இயக்கம் அம்மூடப் பழக்கவழக்கங்களை, வருணாசிரம அநீதிகளை, அவற்றுக்கு ஆதாரமான புராண இதிகாச ஏடுகளை, மொழி, கலைத்துறைகளிலுள்ள சமஸ்கிருத ஆதிக்கத்தைச் சாடிற்று. மக்கள் உள்ளங்களைப் புதிய கருத்துக்களுக்கு ஆதரவாகப் பண்படுத்திற்று. இதன் பயனைத்தான் இடதுசாரிகள் தென்னாட்டில் அறுவடை செய்தனர்.

பொருளாதாரத் துறையில் சமதருமத் தத்துவத்தை திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் மனத்தில் ஊன்ற வைப்பதில், மாஸ்கோ கட்சியைவிடப் பெருவெற்றி கண்டுள்ளது. இதற்குக் காரணம் தி. மு. கவின் வழிகாட்டியான அறிஞர் அண்ணா இதில் கொண்டுள்ள ஆர்வமும் செயல் திறமும்தான் என்பதில் ஐயமில்லை. திராவிட இயக்கம் ஜஸ்டிஸ் கட்சியாயிருந்த போது அதில் நிலச்சுவான்தார்கள், மிராசுதார்கள், சரிகைத் தலைப்பாகைகள் ஆதிக்கம் பெற்றிருந்தனர். திவான் பகதூர்கள், ராவ்பகதூர்கள் ஏராளமாயிருந்தனர். அறிஞர் அண்ணா சமதருமம் பேசிக்கொண்டு பழைய அமைப்பை அப்படியே வைத்திருப்பவரல்ல. அவர் அத்தகையோர் அனைவரையும் பூண்டுடன் கட்சியிலிருந்து வெளியேற்றினார். பொருளாதார முன்னேற்றம் கருதிய எந்தத் திட்டத்தையும், சமதரும மணம் கமழும் எந்த நடவடிக்கையையும் ஆதரிக்க, போராட அவரும் அவர் துணைவரும் படைவரிசைகளும் தயங்கியதில்லை. ஆனால் பொருளாதாரத் துறையுடன் தி. மு. கவின் திட்டம் நின்றுவிடவில்லை. தொழிலாளரை நேரடியாக, உடனடியாகப் பாதிக்காவிட்டாலும், அவர்கள் இனத்தை, இனவாழ்வின் அடிப்படையை அரித்துத் தின்னும் சமய, மொழி, கலைத் துறைகளிலும் அது பேரியக்கங்களை நடத்தி, மக்கள் சக்தியை, வலுவைப் பெருக்கிற்று. இந்த மக்கள் சக்தியை அது தொழிலாளர் இயக்கங்களில் தொழிலாளர்களுக்கு ஆதரவாக நேரடியாகப் பயன்படுத்த முடிந்தது. அத்துடன் தொழிலாளர் நீண்டகாலப் பிரச்சினைகளிலும் இன அடிப்படையாகப் பல முன்னேற்றங்களுக்கு அது வழி வகுக்க முடிந்தது.

திராவிட இயக்கத்தாலும் திராவிட நாட்டு அமைப்பாலும் உலகிலே சமதருமக் குறிக்கோளுக்குப் பெருத்த ஆதாயம் உண்டு. அதை உலகம் சரியாக அறிந்து கொள்ள நீண்ட நாள் ஆகாது. ஆனால் மாஸ்கோக் கொடியினர் இந்த நன்னாளைக் காண விரும்பவில்லை என்றே தோன்றுகிறது. ஏனெனில் நாட்டு அறிவை, வரலாற்று, பண்பாட்டு அறிவை அவர்கள் தாங்களும் வளர்த்துக் கொள்ளவில்லை; மக்களிடையே பரப்பவும் வழிதேடவில்லை. அது மட்டுமன்று. அந்த வேலையைத் திறமையாகச் செய்துவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தினிடம் கொண்ட காழ்ப்பு, அவர்களைப் பின்பற்றியேனும் இவ்வறிவை, இந் நடைமுறையை, இதற்கான திட்டங்களை அவர்களிடமிருந்து பெற முடியாமல் தடுக்கிறது.

திராவிட இயக்கம் மாஸ்கோ வழியே வரவேற்ற இயக்கம் மட்டுமே. அது மாஸ்கோவில் தோன்றிய, மாஸ்கோவிலிருந்து கிளைத்த இயக்கமல்ல. மாஸ்கோவிடமிருந்து அது பல படிப்பினைகளைப் பெற்றுள்ளது. ஆனால் அது மாஸ்கோவுக்கும் பல படிப்பினைகளைத் தரத் தக்க முறையிலேயே வளர்ந்து வருகிறது. மாஸ்கோவுக்கே கீழ் திசையில் நிலத்தைப் பண்படுத்தும் அரிய பெரிய வேலை அது என்றுதான், தானே மேற்கொண்டு நடத்தி வருகிறது. இன்னும் சொல்லப் போனால், மாஸ்கோ உலகில் பரப்பிய புகழ் ஒளியையே அது மாஸ்கோவுக்கும் உலகுக்கும் புதிய பண்புடன், புதிய வளத்துடன், இன்னும் பெரிய அளவில் பரப்பும் நாள் விரைவிலேயே வரக்கூடும்.

உலகுக்கு ஒரு புதிய பொதுவுடைமை நாடு, ரஷ்யாவை விடச் சக்தி வாய்ந்த ஒரு பொதுவுடைமை நாடு கிடைத்து விடும் என்று உறுதியாகக் கூறலாம். அதற்கான சூழ்நிலை திராவிடத்துக்கு இயல்பாலேயே உண்டு. இது திருவள்ளுவர் குறளையும், சங்க இலக்கியத்தையும் கொண்டுள்ள நாடு. இந்த இயற்கை வாய்ப்பைத் திராவிட இயக்கம் பெருக்கியுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணாவும் இத் தேசீய மரபை, இயக்க மரபை, இன்னும் பன்மடங்கு வளர்த்துள்ளனர்.

திருக்குறள் மரபும் சங்க மரபும் வெறும் ஏட்டு மரபுகளல்ல. வடநாட்டில் மாண்டொழிந்த புத்தர்–மகாவீரர் மரபு போன்றவையல்ல அவை. இதனை இக்கால வாழ்விலுள்ள ஒரு சித்திரத்தின் மூலமாகவே காட்டலாம்.

சோவியத் ரஷ்யா பொதுவுடைமை நாடாகுமுன், ரஷ்யா உலகுக்கு ஒரு மகானைத் தந்தது. அவர்தான் லியோ டால்ஸ்டாய். பொதுவுடைமை ஏற்படுமுன் இருந்த ரஷ்யாவின் மிகச் சிறந்த தேசீய வீரர் அவரே. அவர் கருத்துக்களை ஏற்காத பொதுவுடைமைக் கட்சியினர்கூட ரஷ்யாவில் அவரைத் தங்கள் மிகச் சிறந்த தேசீய வீரர் என்று ஒத்துக் கொள்கின்றனர். அவர் உலகின் தலைசிறந்த எழுத்தாளர்களுள்ளும் ஒருவர் என்பது யாவரும் அறிந்ததே.

இந்தியா அல்லது பாரதம் விடுதலை அடையுமுன் அது உலகுக்கு இன்னொரு மகானைத் தந்தது. அதுதான் மகாத்மாகாந்தி. பொதுவுடைமைக் கருத்துடன் விளையாடிய ஜவர்ஹர்லால் நேருவைவிட அவர் இந்தியாவின் தலைசிறந்த தேசீய வீரர் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இராது. அவர் லியோ டால்ஸ்டாயின் சீடர் என்பதும் கருத்தில் இருத்தத் தக்கது.

திராவிட நாடு நாம் இன்னும் பெறவில்லை. அது பெறுவதற்கு முன்பே திராவிட நாட்டில் ஒரு தலைசிறந்த மகான் தோன்றியுள்ளார். அவரே பெரியார் ஈ. வே. ராமசாமி. திராவிட நாடு ஒரு நாடானபின் அவர் உலக மகான்களில் தலைசிறந்தவராக, மற்றவர்களைவிடப் பெரிய வீரராக, மற்றவர்களைவிட நாட்டுக்கும் உலகுக்கும் மனித இனத்துக்கும் மாண்புமிக்கப் பணி செய்தவராகக் கருதப்படுவார் என்பதில் நமக்கு ஐயமில்லை. மகாத்மா காந்தி தொடக்கத்தில் டால்ஸ்டாயின் சீடராயிருந்தது போலவே, இவரும் தொடக்கதில் மகாத்மா காந்தியின் தலைசிறந்த சீடராயிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

லியோ டால்ஸ்டாய், மகாத்மா காந்தி, பெரியார் ஈ. வே. ரா.— நினைத்துப் பாருங்கள், சாக்ரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற மும்மைப் பரம்பரை, மூவரையும் அறிந்தவர்கள். மூன்று நாட்டு வரலாற்றையும் பண்பாட்டையும் ஒப்பிட்டுணர்ச்சியுடன் ஆராய்ந்தவர்கள். அவர்கள் அவரவர் நாட்டின் தேசீயச் சின்னங்கள் என்பதை நன்கு காண்பார்கள். இவர்களில் யார் பகுத்தறிவுத் துறையில், வீரத்தில், சமதருமக் கருத்துக்களைப் பரப்பிய பண்பில் பொதுவுடைமைப் பூங்காவுக்கு அருகாமையிலுள்ளவர்கள் என்பதை முடிவு செய்ய எவரும் தயங்கவேண்டுவதில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தளபதி அறிஞர் அண்ணா இம் மூவர் பரம்பரையையும் திருவள்ளுவர் பரம்பரையையும் ஒருங்கிணைத்தவர் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர்—நங்கையர் மட்டுமல்ல; திராவிட இயக்கத்தவர் மட்டுமல்ல; தமிழர், தென்னாட்டார் அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். டால்ஸ்டாயின் எழுத்துவன்மை, எளிமை, காந்தியடிகளின் அகிம்சை, தன்னலமற்ற தியாக உள்ளம்; ஈவேராவின் பகுத்தறிவுள்ளம், மலை குலைந்தாலும் நிலை குலையா வீர உரம் இவ்வளவும் அவரிடம் உண்டு......ஆம்! இம் மூவரிடமும் இல்லாத, இனிய புன்முறுவலும், அண்டினோர்க்கு அண்ணாவாக மட்டுமல்ல, தம்பிக்குத் தம்பியாக, குழந்தைக்கு குழந்தையாக மாறும் மாய இரசவாதப் பண்பும் இத்தனையும் அவரிடம் உண்டு.

காஞ்சீபுரப் பாதை இந்தச் சிறிய உருவத்துப் பெரிய அறிஞர் கையில்தானுள்ளது—

இப்போது தீர்மானியுங்கள்: மாஸ்கோவா காஞ்சீபுரமா என்று!

முற்றும்

குட்டிக் கதைகள்

இந்தக் கதைகளில் ஏதோ பிரமாதமான தத்துவங்கள் அடங்கி இருப்பதாக ஒரு விமர்சகர் எழுதியுள்ளார். அது என்ன 'தத்துவம்' என்று எனக்குப் புரியவில்லை. நீங்களாவது படித்து உங்களுக்குப் புரிகிறதா என்று பாருங்கள். இந்த ஆசிரியர் ருஷ்ய எழுத்தாளர். (1883–1945). 16-வது வயதிலேயே எழுத ஆரம்பித்தவர். கவிதைகள் கதைகள் நிறைய எழுதியுள்ளார். —ஆ–ர்.

1

கோழியின் ஆறுதல்

ஒரு காலத்தில் ஒரு கிழவனும் கிழவியும் ஒரு கோழி வளர்த்தனர். அந்தக் கோழி ஒரு முட்டையிட்டது. அது மற்ற முட்டைகளைப்போல இல்லாமல் ஊசியாகவும், மேல் ஓடு இல்லாமல் வெறும் எலும்பாகவும், புள்ளிகள் விழுந்தும் இருந்தது. இது பார்க்கிறவர்களுக்கெல்லாம் ஒரு அதிசயமாக இருந்தது. ஒரு நாள் அந்த முட்டையின் பக்கமாக வந்த ஒரு சுண்டெலி தன் வாலைக்கொண்டு அடித்து அதை உடைத்துவிட்டது. அந்த முட்டை உடைந்து போய் விட்டதால்—

கிழவன் கதறினன்,

கிழவி அழுதாள்,

கோழிகள் பயந்து ஓடின,

வாசலில் தூசி பறந்தது,

கதவுகள் 'படார்' என்று திறந்தன,

வேலி சாய்ந்து விட்டது,

குடிசையின் கூரை ஆட்டம் கொடுத்தது.

இதைப் பார்த்தது கோழி. உடனே அது சொன்னது :

"கிழவன் கதற வேண்டாம்,

கிழவி அழ வேண்டாம்,

கோழிகள் பயந்து ஓடவேண்டாம்,

வாசலில் தூசி பறக்கவேண்டாம்,

வேலி சாய வேண்டாம்,

குடிசையின் கூரை ஆட்டம் கொடுக்க வேண்டாம்,

நான் இன்னொரு முட்டையிடுகிறேன் ;

அது புள்ளி விழுந்த ஊசியான முட்டை,

அது பார்க்கிறவர்களுக்கெல்லாம் ஒரு அதிசயம்,

அது சாதாரண முட்டையல்ல; பொன் முட்டை."

2

சேவலும் கோழியும்

ஒரு சேவலும் ஒரு கோழியும் ஒன்ருக வாழ்ந்து வந்தன. ஒரு நாள் இரண்டும் இரை தேடக் காட்டுக்குச் சென்றன. சேவல் ஒரு மரத்தின் மேல் ஏறி, பழங்களைப் பறித்துப் போட்டது. கோழி கீழே இருந்து அவற்றைப் பொறுக்கிக் கொண்டிருந்தது. அப்போது கல் மாதிரிக் கடினமாக இருந்த ஒரு பழம் கோழியின் கண்ணில் வந்து விழவே, கண்ணில் பலமாக அடிபட்டுவிட்டது. உடனே கோழி அவ்விடத்தை விட்டுப்போய் அழுதுகொண்டிருந்தது. அந்த வழியாக ஒரு வண்டி வந்தது. வண்டியிலிருந்தவர்கள் பிரபுக்கள். அவர்கள் கோழியைப் பார்த்து, "கோழியே, கோழியே! நீ ஏன் அழுகிருய்?" என்று கேட்டார்கள்.

"சேவல் என் கண்ணைக் கெடுத்து விட்டது" என்றது கோழி.

"சேவலே, சேவலே! நீ ஏன் கோழியின் கண்ணைக் கெடுத்தாய்?"

"இந்த மரம் என் கால் சட்டையைக் கிழித்து விட்டது. அதனுல் தான்" என்றது சேவல்.

"மரமே, மரமே! நீ ஏன் சேவலின் கால் சட்டையைக் கிழித்தாய்?"

"ஆடுகள் வந்து மேய்ந்தன. அதனுல் தான்" என்றது மரம்.

"ஆடுகளே, ஆடுகளே! நீங்கள் ஏன் மரத்தை மேய்ந்தீர்கள்?"

"எங்களை மேய்க்கும் இடையர்கள் எங்களைக் கவனிக்காமல் விட்டு விட்டார்கள். அதனுல் தான்."

"இடையர்களே, இடையர்களே! நீங்கள் ஏன் ஆடுகளைக் கவனிக்காமல் விட்டு விட்டீர்கள்?"

"எங்கள் முதலாளியம்மா எங்களுக்கு ரொட்டி கொடுக்கவில்லை. அதனுல்தான்."

"முதலாளியம்மா, முதலாளியம்மா! நீங்கள் ஏன் இடையர்களுக்கு ரொட்டி கொடுக்கவில்லை?"

"பன்றி வந்து, மாவுப்பானையைக் கவிழ்த்து விட்டது. அதனுல்தான்."

"பன்றியே, பன்றியே! நீ ஏன் முதலாளியம்மாவின் மாவுப் பானையைக் கவிழ்த்துவிட்டாய்?"

"ஓநாய் வந்து என் குட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடி விட்டது. அதனுல்தான்."

"ஓநாயே, ஓநாயே! நீ ஏன் பன்றிக் குட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடி விட்டாய்?"

"எனக்குப் பசியாக இருந்தது. அதனுல்தான்."

3

சிலந்திப் பூச்சி

ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன் ஈக்களும் பாச்சைகளும் உற்பத்தியாகி மனிதர்களின் ரத்தத்தைக் குடித்து அவர்களைக் கஷ்டப்படுத்திக் கொண்டிருந்தன. அப்பொழுது தைரியசாலியான ஒரு பெரிய சிலந்திப் பூச்சி வந்து ஒரு உபாயம் செய்தது. ஈக்களும் பாச்சைகளும் அதிகமாகப் பறந்து திரியும் பாதைகளில் பெரிய பெரிய வலைகளாகப் பின்னி வைத்தது. அவற்றில் ஒரு வலையிலே ஒரு ஈ அகப்பட்டுக்கொண்டது. உடனே சிலந்தி ஈயை அடித்துக்கொல்லப் போனது. ஈ சிலந்தியைப் பார்த்து, "சிலந்தியே! என் அப்பனே! என்னை அடிக்காதே, என்னைக் கொல்லாதே. என்னைக் கொன்ருல் என் குழந்தைகள் அனாதைகளாகத் தவிப்பார்கள்" என்று சொல்லிக் கெஞ்சியது. சிலந்திப் பூச்சி ஈயை வலையினின்றும் விடுவித்து விட்டது. ஈ பறந்துபோய் எல்லா ஈக்களிடத்திலும் எல்லாப் பாச்சைகளிடத்திலும் பின் வருமாறு சொன்னது :

"சகலமான ஈ, பாச்சைகளே நான் சொல்லுவது என்னவென்ருல், நீங்கள் யாவரும் மரப்பட்டையின் மறைவில் போய் ஒளிந்து கொள்ளுங்கள். ஒரு பெரிய சிலந்திப் பூச்சி வந்து சேர்ந்திருக்கிறது. அது பெரிய பயில்வானுக இருக்கிறது. நாம் பறந்து செல்லும் நடை பாதைகளிலெல்லாம் அது வலைவிரித்து வைத்திருக்கிறது."

இதைக் கேட்டதும் எல்லா ஈக்களும் எல்லாப் பாச்சைகளும் பறந்து சென்று மரப்பட்டையின் மறைவில் ஒளிந்துகொண்டன.

சிலந்திப் பூச்சியோ தன் வலையை விட்டு வெளியேறிச் சென்று ஒரு சிள் வண்டு, ஒரு செவ்வண்டு, ஒரு கறையான் ஆகியவற்றைக் கூட்டி வைத்துக்கொண்டு கீழ்க்கண்டபடி சொல்லிற்று :

"சிள் வண்டே! நீ குன்றின் மீது உட்கார்ந்து சுருட்டுக் குடித்துக்கொண்டிரு. செவ்வண்டே! நீ முரசை அடி. கறையானே! நீ மரப்பட்டையின் மறைவில் சென்று, சிலந்திப் பூச்சியாகிய அந்தப் பயில்வான் செத்துப் போய்விட்டதாகவும், சிலந்திப் பூச்சியின் தலையை வெட்டி விட்டதாகவும் வதந்தியைப் பரப்பு."

சிள் வண்டும், செவ்வண்டும் அவ்வண்ணமே செய்தன. கறையான் மரப்பட்டையின் மறைவில் சென்று, அங்கே ஒளிந்து கொண்டிருக்கும் ஈக்களையும் பாச்சைகளையும் பார்த்து, "நீங்கள் ஏன் இங்கே ஒளிந்து கொண்டு அவஸ்தைப்படுகிறீர்கள்? அந்தப் பயில்வான் சிலந்தி செத்துப் போய்விட்டது. அதன் தலையை வெட்டி விட்டார்கள்" என்று சொன்னது. உடனே பாச்சைகளும் ஈக்களும் வெளிக்கிளம்பி சந்தோஷமாகப் பறந்து வந்தன. இங்கும் அங்கும் பறந்து திரியும்போது அவை சிலந்திப் பூச்சியின் வலையில் அகப்பட்டுக் கொண்டன. சிலந்திப் பூச்சி அவற்றைப் பார்த்துச் சொன்னது :

"என் விருந்தினர்களே! நீங்கள் ஏன் அடிக்கடி என்னைப் பார்க்க வருவதில்லை?"

4

நரியும் நண்டும்

நரி நண்டைப்பார்த்து, "நாமிருவரும் பந்தயம் வைத்து ஓடிப் பார்க்கலாமா?" என்று கேட்டது. "சரி" என்றது நண்டு. ஓட்டப் பந்தயம் ஆரம்பமாயிற்று. நரி ஓட ஆரம்பித்தது. ஆனுல் நண்டு நரிக்குத் தெரியாமல் அதன் வால் மயிரை நன்ருகக் கவ்விக்கொண்டது. நரி ஓட்டமாக ஓடி, போய்ச் சேரவேண்டிய இடத்தைச் சேர்ந்ததும், திரும்பிப் பார்த்தது. அதற்குள் நண்டு நரியின் வாலிலிருந்து நரிக்குத்தெரியாமல் கீழே குதித்துவிட்டது. உடனே அது நரியைப் பார்த்து சொன்னது ; "நான் உனக்காக இங்கு எவ்வளவு நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறேன் தெரியுமா?"

—அலெக்ஸீ டால்ஸ்டாய்.

முகத்திலா ?

ஒரு ஆங்கிலேயர் காட்டுப் புறத்துக்குப் பயணம் போயிருந்தார். போன இடத்தில் அவரது க்ஷவரக் கத்தி உடைந்து போய் விட்டது. எனவே அந்த ஊரிலுள்ள நாவிதனிடம் சென்ருர். அவன், அவர் முகத்துக்குச் சோப்பு போடுமுன், பிரஷில் எச்சிலைத் துப்பிக் கொண்டான்.

இதைக் கண்ட அந்த ஆங்கிலேயர், "என்னப்பா எல்லோருக்குமே பிரஷில் துப்பித்தான் க்ஷவரம் பண்ணுவாயா?" என்று கேட்டார்.

அதற்கு அவன், "இல்லை இல்லை. இப்படிச் செய்வது வெளியூர்க்காரர்களுக்கு மட்டும்தான் —உள்ளூர்க்காரராயிருந்தால், முகத்திலேயே துப்பிவிடுவேன்!" என்ருன்.

—காமன்ஸ் சபையில் ஒருவர் சொன்னது.

ஞாபக மறதி

மேபல் டோவ்-டான்க்வா

★

அக்வாஸ் ராஜ்யத்தின் தலைவனுகிய இரண்டாவது நானு அதேக்கு, தான் அக்வாஸின் சிம்மாசனம் ஏறிய இருபதாம் ஆண்டு விழாவைக்கொண்டாடிக்கொண்டிருந்தான். சுற்றுப் பக்கத்திலுள்ள நகரங்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் வந்து தலைநகரமாகிய நிக்வாபியில் கூடியிருந்தனர்.

அது கொக்கோ விளைவு எடுக்கும் காலம். அதனுல் ஜனங்களிடம் ஏராளமாகப் பணம் புழங்கியது. குடியானவர்கள் இஷ்டப்பட்டபடியெல்லாம் பணத்தைச் செலவழித்துக் கொண்டிருந்தார்கள். நெடு நாட்களாகச் சந்திக்காத நண்பர்களெல்லாம் இந்தச் சமயத்தில் ஒன்று கூடித் தங்கள் நட்பைப் புதுப்பித்துக்கொண்டனர். ஜின், ஷாம்பேன், விஸ்கி போன்ற மதுபானங்களுடன் நண்பர்களின் வீடுகளுக்கு விஜயம் செய்து, பழைய நாளைய சம்பவங்களைப்பற்றி ஆனந்தமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்புறம் விடைபெற்றுச் செல்லும்போது தாம் பரிசு கொடுக்கக்கொண்டு வந்த மதுபானங்களில் பெரும்பாலானவற்றைத் தாமே குடித்துத் தீர்த்துவிட்டுக் கிளம்பினுர்கள். யாருக்கும் எவ்விதக் கவலையும் கிடையாது.எல்லோரும் சந்தோஷமாகவே இருந்தனர். ஐரோப்பிய உடை யணிந்தவர்களை அங்கு பார்ப்பது மிகவும் அபூர்வமாகவே இருந்தது. அநேகமாக எல்லோரும் கோல்டு கோஸ்டுப் பிரதேசத்தின் சுதேசி உடையிலேயே காட்சியளித்தார்கள். ஆண்கள், காலுக்கு 'டோகோட்டா' செருப்புகள் அணிந்து, பலவர்ண வெல்வெட்டு உடைகளையும், கைநெசவு போட்ட 'கென்ட்டி'த் துணிகளையும் உடுத்தியிருந்தார்கள். பெண்களின் காதில் தங்க லோலாக்குகள் ஊசலாடின; அவர்கள தங்கச் சங்கிலிகளும், தங்க வளையல்களும் அணிந்திருந்தார்கள். வர்ண சோபை நிறைந்த சுதேசி உடையணிந்து அந்தஸ்துமிக்க தோற்றத்துடன் காட்சி தந்தார்கள், பெண்கள்.

அரண்மனை முரசுகள் ஆனந்த முழக்கமாக முழங்கிக் கொண்டிருந்தன.

அப்பொழுது பிற்பகல் நாலு மணி. ஜனங்கள் பூங்காவை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். அங்கே தான் 'ஒத்வீரா' ஆட்டம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. பூங்காவைச் சுற்றி ஈச்ச ஓலை வளைத்திருந்தது. அந்த இடத்திற்கு ஒரு அலங்காரமாக விளங்கியது.

அரசனுகிய இரண்டாவதுநானு அதேக்கு ஒரு பல்லக்கில் வந்து கொண்டிருந்தான. பல்லக்கின் மேலே ஜாஜ்வல்யமான சந்திர வட்டக் குடை. அரசனின் தலையில் பொன் முடி; அவனுடைய 'கென்ட்டி' உடையிலோ முத்துகள் போல சின்னஞ் சிறு பொன் மணிகள் தைக்கப்பட்டிருந்தன. அவன் மார்பில் சரம் சரமாகத் தங்கச் சங்கிலிகள், மணிக்கட்டிலிருந்து முழங்கைவரை பொன் வளையல்களும் அணிந்துகொண்டிருந்தான். அவனுடைய வலது கையில் அலங்கார வேலை செய்த யானைவால் இருந்தது. அவனுக்கு உற்சாகம் உண்டாகும் சமயங்களில் ஜனங்களைக் குஷிப் படுத்துவதற்காக அந்த யானைவாலை ஆட்டுவான். அவனுக்கு முன்பாக அவனுடைய "ஆத்மா", அதாவது ஒரு பன்னிரண்டு வயதுச் சிறுவன், சம்பிரதாயபூர்வமாக வாளுடன் அமர்ந்திருந்தான்.

அரசனுக்குப் பிறகு மந்திரி வந்தான். அவன் சிவப்பும் பச்சையும் கலந்த அருமையான வெல்வெட்டு உடை தரித்திருந்தான். அவன் தலையைச் சுற்றிக் கட்டியிருந்த துணியில் கனமான தங்கக் கம்பிகள் இழைத்திருந்தன. அவனுக்குப் பிறகு ஒருவன் பின் ஒருவனுக மற்ற பிரதானிகள் குடை நிழலில் வந்துகொண்டிருந்தனர். மிகவும் நீளமான ஊர்வலம். ஒவ்வொரு பல்லக்கையும் இறக்கும்போது முரசுகள் ஒரே ஆரவாரத்துடன் முழங்கின. அரசன் இறங்கி மேடையின்மேல் ஏறி அமர்ந்துகொண்டான். அவனுக்குப் பக்கத்தில் பிரதானிகளும், ஜில்லாக் கமிஷனரும், காப்டனும் உட்கார்ந்து கொண்டிருந்தனர். ஸாஸா என்னும் விதூஷகன், கோமாளியின் கால் சட்டையுடனும், குரங்குத் தோல் தொப்பியுடனும் வந்து அரசனுக்கு முன்பாக நின்று முகத்தைக் கோணியும், கண்களை உருட்டியும், பயில்வான் விளையாட்டுகள் ஆடியும் தமாஷ் பண்ணிக்கொண்டிருந்தான். ஆனுல் அரசன் இதைக்கண்டு சிரிக்கவில்லை. பொதுமக்களுக்குத் தெரியும்படியாக அரசன் சிரிப்பது வழக்கத்துக்கு விரோதமாகும்.

பூங்காவைப் பார்க்க ஒரே அமர்க்களமாக இருந்தது. பிரதானிகளும், அவர்களின் பரிவாரங்களும் தத்தம் ஆசனங்களில் பற்பல நிறமுள்ள குடைகளின் கீழே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அரசன் பேசுவதைக்கேட்டு அதைப் பொது ஜனங்களிடம் சொல்லும் 'பேச்சுக்காரர்கள்' தங்களுக்குரிய தங்கத் தடிகளுடன் காட்சியளித்தனர். அந்தத் தங்கத் தடிகள் வெயிலில் பளபளந்துக் கொண்டிருந்தன. பெண்கள், பல வர்ணப் பட்டுடையோடும். 'கென்ட்டி' வெல்வெட் உடைகளோடும், தலையில் தங்க ஊக்கிகள் குத்திக்கட்டிக்கொண்டிருந்த பளபளப்பான கறுப்புத் துணியோடும் வண்ணத்திப் பூச்சிகளைப் போலத தோற்ற மளித்தனர். வாலிபர்கள் முன்னும் பின்னுமாக மைதானத்தில் நடைபயின்று கொண்டிருந்தார்கள். அவர்களுடைய உடைகள் அவர்களுக்குப் பின்னுல் தரையை உரசிக்கொண்டு வந்தன. அவர்கள் அணிந்திருந்த பட்டுத் தலைப்பாகைகள் வெயில் பட்டு மின்வெட்டின.

முரசுகள் முழங்குகின்றன....... பிரசித்தி வெற்ற 'அதோவா' நாட்டியத்தை ஆடப் போகிருர்கள் பெண்கள். சுரைக் குடுக்கையால் செய்த அலங்காரமான மகுடிக் குழல்கள் லயசுத்தமாகக் கீதம் இசைக்கின்றன. பெண்கள் சிறிது தூரம் ஓடுகிருர்கள்; பிறகு மெதுவாகப் பக்கவாட்டில் திரும்புகிருர்கள். தங்கள் புஜங்களை அசைத்தாட்டுகிருர்கள். அவர்களில் ஒருத்தி பச்சை, நீலம் சிவப்பு ஆகிய நிறங்களில் ஒரு 'கென்ட்டி' சவுக்கத்தை உடுத்தியிருந்தாள். அந்த உடையில் எல்லோரையும்விட அவள் கவர்ச்சிகரமாகத் தோற்றம்அளித்தாள். ஒரு வனமோஹினியைப் போல மெதுவாக, அழகாக, அவள் நகர்ந்து ஆடினுள். அதைப் பார்த்ததும் அரசனுக்கு உற்சாகம் கிளம்பிவிட்டது. உடனே கை நிறையப் பணத்தை அள்ளி நாட்டிய கோஷ்டியினரின் மீது வீசினுன். அந்த அழகான பெண் தன் மீது விழுந்த நாணயங்கள், கலீர் என்ற சப்தத்துடன் தரையில் விழும்போது புன்னகை செய்தாள். உடனே அங்கு சிறிது நேரம் நின்று நன்றி யறிதலாக யாதொரு சைகையும் செய்வதற்கு அவகாசம் இல்லாததால் தொடர்ந்து நாட்டியமாடுவதிலேயே ஈடுபட்டாள்.

அரசனுகிய நானு தன் நம்பிக்கைக்குப் பாத்திரனுக இருந்த ஒரு பேச்சுக்காரனைப் பார்த்துத் திரும்பி, "யார் அந்த அழகி?" என்று கேட்டான்.

"எனக்குத் தெரியாது,"

"அவளை என் மனைவியாக்கிக் கொள்ளவேண்டும்."

நானுவுக்கு வயது ஐம்பத்தைந்து ஆகிறது. அவனுக்கு ஏற்கெனவே நாற்பது மனைவியர் உண்டு. ஆனுலும் புதிதாக ஒரு அழகியைப் பார்க்கும்போது, ஏக பத்தினி விரதம் என்ற பாக்கியத்துக்கோ அல்லது துர்ப்பாக்கியத்துக்கோ ஆளான ஒருவனுக்கு ஏற்படக்கூடிய பரபரப்பும் அதிர்ச்சியும் அவனுக்கு ஏற்படுவது உண்டு. பழையபடியும் அவனுடைய நரம்புகளில் ஆசைத்தீ பற்றி எரிந்தது. அந்த நாற்பது மனைவியருடன் பழகிப் பழகி அவனுக்கு அலுத்துப்போய் விட்டது. சமீப காலமாக அவனுக்குத் தன் மனைவிமாரின் பெயர்களே மறந்து போய்விட்டன. இந்தக் குழப்பத்தில் ஒருத்தியின் பெயரைச் சொல்லி மற்றொருத்தியை அழைக்கலானுன். அவன் கடைசியாகக் கல்யாணம் செய்து கொண்ட அந்தப் புதுப்பெண்டாட்டி ஒரு நாள் துக்கம் தாங்க மாட்டாமல் அழுதுவிட்டாள். காரணம் என்னவென்ருல், அவன் கோர ஸ்வரூபியான தன் கிழட்டு மனைவியின் பெயரைச் சொலலி, அதாவது 'ஒதா' என்று அவளை அழைத்ததுதான்.

'இந்த நாட்டியக்காரி ஒரு தனி ரகம்தான். இவள் நமக்குக் கிடைத்தால் அரண்மனைக்கு ஆனந்தம் ஊட்டுவாள்' என்று தனக்குள் நினைத்துக்கொண்டு பேச்சுக்காரனைப் பார்த்துத் திரும்பினுன் அரசன். அவனிடம், "இந்தப் பெண்ணுக்கு நான் நூறு பவுன் கொடுக்கிறேன்" என்ருன்.

"நானு! இவளுக்குஏற்கெனவே கல்யாணமாகி யிருக்கக்கூடும்" என்ருன் பேச்சுக்காரன்.

"அப்படியானுல் அவளுடைய கணவன் கேட்கும் தொகையைக் கொடுத்து விடுகிறேன் அவன் எவ்வளவு கேட்டாலும் சரிதான்" என்ருன் அரசன். நானு எப்படிப்பட்டவன் என்று பேச்சுக்காரனுக்கு நன்ருகத் தெரியும், அதாவது, பெண் விஷயத்தில் அரசன் நினைத்ததை முடித்தே தீருவான் என்ற விஷயம் அவனுக்கு நன்ருகத் தெரியும்.

அரசன் சொன்னுன்: நீ கஜானு அதிகாரியிடம் போய் ஐம்பது பவுனை வாங்கி, அதை இந்தப் பெண்ணின் உறவினரிடம் கொண்டுபோய்க் கொடு. இன்று இரவு இவள் என் அரண்மனைக்கு வந்ததும், மீதி ஐம்பது பவுனை இவள் கையில் கொடுத்து விடுகிறேன். நீ வைத்திருக்கும் தங்கத் தடியை கோஜோவிடம் கொடுத்து விட்டு, இப்பொழுதேபோய் ஆக வேண்டிய காரியங்களைக் கவனி"

நானு, தான் நினைத்ததை 'இன்றே, அதுவும் இன்னே செய்யும்' காரியக்காரன், பெண்ணழகில் மனக்கிளர்ச்சி அடையும்போது உலகில் மற்ற ஆண்களெல்லாம் எப்படி நடந்து கொள்ளுவார்களோ, அப்படித் தான் நானுவும் நடப்பான். சில சமயங்களில் வாட்ட சாட்டமான ஒரு காலையோ, அல்லது ஒரு கண வீச்சையோ, இல்லையெனில் நாசித் துவாரத்தின் பக்கம் மூக்கு துடிப்பதையோ பார்த்தாலும் அல்லது கார்வை நிறைந்த ஒரு குரலைக்கேட்டாலும், உடனே இந்த ஆண் பிறவிகளுக்கு வெறி தலைக்கேறிவிடும், அப்புறம், தாங்கள் ஆசைப்படும் ஜீவனை அடையும் வரை அவர்களைவிட்டு இந்தப் பைத்தியம் நீங்காது. எதைக் கண்டாலும் வெறுத்து முகம் சுளிக்கும் சில பேர்வழிகள் இருக்கிருர்களே, அவர்கள் பெண்களிடத்தில் ஓரளவுக்கு உள்ளொன்று புறம் ஒன்ருகத்தான் நடந்து கொள்ளுவார்கள்; நாலுக்கான பெரிய மனிதர்களைப்போல விட்டுக்கொடுப்பார்கள்; ஆனுல் தாம் வரித்த பெண்களுடன் வாழ் நாள் முழுவதுமே தம்மைப் பிணித்துக்கொள்ளாமல் காலந் தள்ளுவதில் சர்வ ஜாக்கிரதையாக இருப்பார்கள்; அதே சமயத்தில் பெண்களும் புத்திசாலித்தனமாகவே நடந்துகொள்ளுகிருர்கள். ஆண்மகனின் சரீரக் கவர்ச்சி

களில் அவர்கள் மெய் மறந்து விடுவதில்லை; ஆண்களின் பணப் பை கனத்தும் அவர்களுடைய வருமானம் நிச்சயத்துடனும் இருந் தால் கல்யாணம் என்ற பணய விளையாட்டில் ஏற்படும் அபாயங் களைப் பெண்கள் பொருட்படுத்து வதில்லை. ஆனால் இந்தச் சந்தர்ப் பத்தில் ஒரு புது மாதிரியான புதுமைப் பெண் உருவாகிக் கொண்டிருக்கிருள். கல்நெஞ்சும் ஆண்பிள்ளை சுபாவமும் உடைய வளாக இருக்கிருள் இந்தப் புது மைப் பெண். பூரண அம்சம் கொண்ட காதலனும், நல்ல வரு மானமும், மற்றும் பல சௌகரி யங்களும் வேண்டும் என்று இந் தப் பெண் வற்புறுத்துகிருள்; இல்லையென்ருல் கல்யாணத் "துன்ப"த்திலிருந்து நிரந்தரமாக விலகிக் கொள்ளுகிருள்.

நாம் பழையபடியும் நாஞவிடம் வருவோம். நாஞவுக்கு மேற் கொண்டு அந்தக் கூட்டத்தில் உட்கார்ந்திருக்கப் பிடிக்கவில்லை. எல்லாம் அலுத்துப் போய்விட் டது, மாலை ஆறு மணி ஆயிற்று. எழுந்து பல்லக்கில் ஏறினான்; புறப்பட்டு விட்டான். பிறகு பிர புக்களின் குடைகள் நாட்டியம் ஆடின. அவர்களும் பல்லக்கு களில் கிளம்பி விட்டார்கள். ஜனங் கள் ஒரே ஆரவாரம் செய்தனர்; முரசுகள் முழங்கின..........வெகு சீக்கிரத்திலேயே அந்தி மயங்கி விட்டது; பூங்காவின் பரப்பு இப் போது ஆள் நடமாட்டமின்றி வெறித்து வெளியாகி விட்டது.

அரசன் நாஞ குளித்து பொன் சரிகை போட்ட பசுசை உடையை அணிந்து கொண்டான். இரண்டு வேலைக்காரர்கள் இருபுறமும் நின்று இறகு விசிறியால் அவ னுக்கு வீசிக்கொண்டிருந்தார்கள். தன் அந்தரங்க இருக்கையில், வெல்வெட் மெத்தை தைத்த ஆசனத்தில் சாய்ந்து கொண டிருந்தான் அரசன். பக்கத்தில் ஒரு பை கிடந்தது. அதில் ஐம்பது பவுன்கள் இருந்தன. தான் அனுப்பி வைத்த பேச்சுக்காரன் சமயோசித புத்தியும் தந்திரமும் உள்ள ஆசாமி என்று அவனுக் குத் தெரியும் அதனுல்தான் அக்வாஸின் சிம்மாசனம் ஏறிய இருபதாம் ஆண்டு வைபவத்தை அன்றிரவில் கொண்டாடுவதற் குத் தனக்கு உதவியாக ஒரு மனைவி வந்து சேருவாள் என்று நிச்சயமாகக் கருதினான்.

எப்படியோ நாஞ தூங்கிவிட் டான் போலிருக்கிறது. அதனுல் தான் அவன் கண் விழித்துப் பார்க்கும் போது, தன் காலடியில் ஒரு பெண் முழந்தாளிட்டுக் குனிந்து கொண்டிருப்பதைக்கண் டான். உடனே அவளைத் தூக்கித் தன் மெத்தையில் உட்கார வைத் தான்.

"இங்கே வருவதில் உனக்குச் சந்தோஷம் தானே?"

"நாஞவின் உத்தரவை நிறை வேற்றுவதில் எனக்குச் சந்தோ ஷம்தான்."

"அருமைப் பெண்ணே, உன் பெயர் என்ன?"

"பிரபோ! என் பெயர் எபூவா."

"பெயர் அழகாக இருக்கிறது! நீயும் அழகாக இருக்கிருய்! இதோ பரிசுப்பணத்தின் பாக்கி யான ஐம்பது பவுன் இருக்கிறது. எடுத்துக்கொள். இன்றிரவு நாம் நமக்குள் விவாகம் செய்து கொள்ளுவோம். அவசியமான சடங்குகளை அப்புறம் செய்து கொள்ளலாம்" என்ருன் நாஞ. நாஞ ஏதோ புதிதாக இந்த யுக்தி யைக் கையாண்டு விடவில்லை. முழுநாகரிகம் அடைந்தவர்களும், நாகரிகம் அடையாத பூர்வ குடி களும் உலகெங்கும் அநேகமாக இதே வார்த்தைகளைச் சொல்லி இதே யுக்தியைத்தான் கையாண் டிருக்கிருர்கள்.

அந்தப் புத்திசாலிப் பெண் அரசனைப் பார்த்து, இந்த "பணத் தைக்கொண்டுபோய் என் தாயா ரிடம் கொடுத்துவிட்டு வரு கிறேன். அவள் வாசல் நடையில் இருக்கிருள். நான் போய் வர லாமா?" என்று கேட்டாள். நாஞ வும் சம்மதித்தான்.

தமிழில் தருபவர்

கு. அழகிரிசாமி

மேபல் டோவ்-டான்க்வா: இந்த நீக்ரோப் பெண் ஆப்பிரிக்கா வில் பிறந்தவர். சொந்தப் பெயரிலும் புனை பெயர்களி லும் ஆப்பிரிக்கப் பத்திரிகை களில் நிறைய எழுதியிருக் கிருர். தம் நாட்டு மக்களுக்கு அவர்களுடைய பண்பாட்டை இலக்கியத்தின் மூலம் எடுத் துரைப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.

எபூவா வெளியே போய்த் திரும்பினாள்.

"நாஞ, நூறு பவுன் கொடுத்த தற்காக தங்களுக்கு என் தாயா ரும் என் உறவினரும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிருர்கள்."

"என் அழகுச் செல்வமே! நன்றி தெரிவிப்பானேன்? அதற்கு இங்கே யாதொரு அவசியமும் கிடையாதே!" என்று சொல்லி விட்டு, அவளுடைய அழகிய மார்பின் மீது ஒட்டிக்கொண்டு கிடக்கும் மாலையின் தந்தமணிகளை உருட்டி விளையாடிக்கொண்டிருந் தான்.

"தாங்கள் என்னிடத்தில் ஏதோ ஒரு அதீதமான கவர்ச்சியைக் கண்டிருக்கவேண்டும் என்றும், அதனுல்தான் இப்போது இவ் வளவு பணத்தைத் தாங்கள் செல வழித்திருக்கிறீர்கள் என்றும் அவர்கள் நினைக்கிருர்கள்" என்று சொல்லிவிட்டு நாணத்துடன் புன்னகை செய்தாள் எபூவா.

"ஆனால் நீ உண்மையிலேயே கவர்ச்சிகரமாகத்தானே இருக் கிருய்! அன்பே, இது அவர்கள் கண்களுக்குப் புலப்படவில் லையா?"

"எனக்கும் கூடத்தான் அது புலப்படவில்லை, நாஞ."

"உனக்கும் தெரியவில்லையா? நீ ரொம்ப அடக்கமான பெண். போய், நீயே உன் உருவத்தை அந்தக் கண்ணுடி முன் நின்று பார்."

குறும்புத்தனமாகப் புன்னகை செய்துகொண்டு கண்ணுடியின் பக்கம் சென்ருள் எபூவா. தன் னைத்தானே கண்ணுடியில் பார்த் துக்கொண்டாள். அப்புறம் திரும்பி வந்து மெத்தையில் உட் கார்ந்து, நாஞவின் மார்பில் தலையை வைத்துச் சாய்ந்து கொண்டாள்.

"எபூவா! நீ ரொம்ப ரொம்ப அழகான பெண்" என்று சொல் லிக்கொண்டே அழகாக வாரி முடித்த அவளுடைய இருண்ட கேசத்தைத் தடவிக் கொடுத் தான் நாஞ.

"எப்போதும் நான் இதே மாதிரித்தானே இருக்கிறேன்! இன்று மட்டும் நான் வேறு மாதிரி ஆகிவிட்டேஞ?"

"நீ சொல்லுவது உண்மை யாக இருக்கும் என்றுதான் எனக் குத் தோன்றுகிறது. ஆனால், உன்னை நான் இன்று தானே பார்க்கிறேன்?"

"என்ன, இன்றுதான் பார்க் கிறீர்களா?"

"ஆம்."

"நீங்கள் மறந்து விட்டீர்களா?"

"மறந்து விட்டேனே? எதை?"

"தாங்கள் எனக்கு ஐம்பது பவுன்கள் கொடுத்து,...இரண்டு வருஷங்களுக்கு முன்பே என்னைக் கல்யாணம் செய்து கொள்ள வில்லையா?" *

அவனுடைய சந்தோஷம்

அநேக வருஷங்களுக்கு முன் இங்கிலாந்து, ஸ்காத்லாந்து ஆகிய இரு நாடுகளின் எல்லைப்புறப் பிரதேசத்தில் ஒரு குடி யானவன் வசித்து வந்தான். அவனுக்கு ஒரு சந்தேகம், 'நாம் இங்கிலாந்தில் வாழ்கிருேமா அல்லது ஸ்காத்லாந்தில் வாழ்கிருேமா?' என்று. இந்தச் சந்தேகத்தைத் தெளிவாக் கும்படி அந்தக் குடியானவன் ஒருவனிடம் கேட்டான்.

அதற்கு அந்தப் புதிய ஆள், "நீ இங்கிலாந்தில்தான் வசிக் கிருய்" என்று கூறினான்.

உடனே குடியானவன் சந்தோஷ மிகுதியால் கூறியதாவது: "நல்ல வேளை கடவுளே! இனிமேல் ஸ்காத்லாந்தின் குளிர் கால விறைப்பில் கஷ்டப்பட வேண்டியதில்லை!"

இதோ! தலைசிறந்த படங்கள்!

திருச்சி தஞ்சாவூருக்கு நாங்கள் விநியோகிக்கிருேம்!

நேஷனல் புரொடக்ஷன்ஸ்;

அம்மையப்பன்

மதருஸ் பிக்சர்ஸ்:

செந்தாமரை

வி. சி. சுப்பராமனின்: மேனகா

பத்மினி பிக்சர்ஸ்: முதல் தேதி

மற்றும்,

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, சொர்க்கவாசல் — நால்வர், பணம், ஆசைமகன், மாங்கல்யம் —

மற்றும் பலபடங்கள்!

ராணி பிக்சர்ஸ்

திருச்சி.

கே. சுப்பிரமணியன், சென்னை.

சாதாரண மனிதன் எப்போது தத்துவஞானியாகிறான்?

தான் கஷ்டத்தில் உழன்று கொண்டிருக்கும் போது, தன்னைக் காட்டிலும் அதிகமாகக் கஷ்டப்படுபவனுக்கு ஆறுதல் சொல்லுகையில்!...அது அவனுக்கும் மருந்தாகிறது.

* * *

மீ. அனிபா, ஏர்வாடி.

"மதம், மதியை மயக்கும் மது" என்று பிரசாரம் செய்யும் நீங்கள் கூறும் 'திராவிடம்' கிடைத்தால் 'இஸ்லாமீய மதம்' எந்த நிலையில் இருக்கும்?

இருக்க வேண்டிய நிலையில் இருக்கும்!

* * *

எஸ். அயூப், குன்னூர்.

காதல் பெரிதா? கடமை பெரிதா?

எது சுகம் தருகிறதோ, அது பெரிது!

* * *

எஸ். கலைச் செல்வன், கமுதி.

கண்ணகி போன்ற ம. பொ. சியும், மாதவி போன்ற அண்ணாதுரையும் ஒன்று சேரும் போது கோவலன் போன்ற காமராசர் நிலை என்ன ஆகும்?

சிலப்பதிகாரம் மாறிப்போகும். கோவலன், மாதவியுடனேயே இருக்க நேரும். கண்ணகி 'சிப்பிபேந்த' நேரும்.

* * *

பா. மங்களம், கருவூர்.

காங்கிரஸ்காரர்கள், "நாங்கள் தியாகம் செய்தோம்! தியாகம் செய்தோம்" என்று பேசுகிறார்களே, அவர்களுக்கு என்ன பதில் சொல்வது?

இப்படி பதில் கேள்வி கேளுங்கள்: "நீ செய்த தியாகத்தைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. கப்பலை கரைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தாயா?"

* * *

ஏ. பாளையம், சென்னை.

திராவிட கழகத்திற்கும் முன்னேற்றக் கழகத்திற்கும் என்ன வித்தியாசம்?

பின்னது முன்னேறிச் செல்வது.

* * *

கே. ராமன், வண்ணையம்பதி.

சிவஞானமும் அவர்கட்சியும் காங்கிரஸிலிருந்து விலகி விட்டனவே! இனி என்ன ஆகும், அவர்கள் நிலை?

சங்கர சங்கர சம்போ! நான்
தங்கவும் இடமின்றித்
தவிக்கிறேன் அம்போ!
சங்கர சங்கர சம்போ!

அரங்க அரசு, திருச்சி.

இளம் விதவை, பழக்கமில்லாதவள்; பழகி அன்னமிட்டு பரிசு வழங்கியிருக்கிறாள். இவளைக் காதலி எனக் கொள்வதா, சோதரி எனக் கொள்வதா?

அறிவாளிகள் சோதரி என்பர்.

* * *

ந. தங்கவேலன், திண்டுக்கல்.

தி. மு. க. தோழர்கள், சமூக சங்கங்களில் பணியாற்றலாமா?

கூடாது! சமூக முறைக்கு விரோதமானது தி. மு. க. வின் இனவாரிக் கொள்கை.

* * *

ஜே. கண்ணன், அரியலூர்.

கேலிச் சித்திரம் போட்டு விளக்கம் தருக.

கேலிச்சித்திரத்தையும் போட்டு விட்டு விளக்கமும் கொடுக்க வேண்டிய நிலையில் 'தினத் தந்தி' ஆகச் சொல்கிறீரா? சித்திரம் போடுகிறேம்; உமக்கே விளக்கம் புரியும்.

* * *

சு. நெடுமாறன்,
மேல்பட்டாம்பாக்கம்.

"காங்கிரஸுக்கு ஓட்டுப் போடாதீர்!" என்று அறை கூவிய ஈ. வே. ரா, குடியாத்தம் தேர்தலில் காமராசரை ஆதரித்தாரே ஏன்?

ஓடும் ஈரோட்டுக்கு! அவரிடமே கேளும்!

பி. பட்டாபி, வேலூர்.

குத்தூசியார் எவ்வளவு படித்திருக்கிறார்?

அவர் போகிற போக்கில், அவர் படித்திருப்பதே எனக்கு மறந்து போய்விட்டது!

* * *

டி. பி. நாகராஜன், வீரனேரி.

ஓய் தென்றலாரே! கண்ணதாசன் எத்தனை ஆண்டுகளாக மாடர்ன் தியேட்டரில் தொடர்பு கொண்டுள்ளார்?

மீசை அரும்புவதற்கு முன்பிருந்தே! இந்த மாதத்தோடு எட்டு வருடம் பத்து மாதங்கள் ஆகின்றன. இன்றுதான் அவர் சினிமா உலகிலிருந்து கட்சிக்கு வந்தார்!

* * *

வீராணம், புதூர்

எங்கே, போன இதழில் சம்பத்தின் கட்டுரையைக் காணோம்?

சுற்றுப் பயணத்திலிருந்தார். இதோ! அடுத்த வாரம் வருகிறது!



சிரிப்புத்தான் வருகுதையா!

யாருக்கு ஆபத்து!

புதிதாக ஒரு பெண்ணுக்குக் கல்யாணமாயிற்று. அவள் தன் தாயுடனும் புருஷனுடனும் காடு சூழ்ந்த ஒரு கிராமத்தில் வசித்து வந்தாள். ஒரு நாள் அவளுடைய புருஷன், குடிசைக் குள்ளே உட்கார்ந்து ஒரு காயைத் தின்றுகொண்டிருந்தான். அப்போது மனைவி ஓட்டமாக அவனருகே ஓடிவந்து, "வாருங்கள், வாருங்கள்! அம்மாவைப் புலி துரத்துகிறது" என்று பதற்றமாகக் கூறினாள். ஆனால், அவன் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. "புலி எப்படி நாசமானால் எனக்கென்ன?" என்றான்.

* * *

புரிந்த லட்சணம்

ஓர் ஆங்கிலத் தளபதி, கூர்க்கப் படையினருக்கு, பாரசூட் பயிற்சியைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது, பாரசூட் விமானிகள் 500 அடி உயரத்திலிருந்து கீழே குதிக்கவேண்டும் என்று கூறினார்.

பிரசங்கம் முடிந்ததும், ஒரு கூர்க்க சிப்பாய் அந்தத் தளபதியிடம் சென்று, "500 அடி உயரத்திலிருந்து குதிப்பது கஷ்டம். 300 அடி என்றால் இலகுவாயிருக்கும்" என்றார்.

அந்த ஆங்கிலத் தளபதி சிரித்துக் கொண்டே, "300 அடி உயரத்திலிருந்து குதிக்கத் தொடங்கினால், பாரசூட் குடையை விரிப்பதற்குக் கூட நேரம் இராதே!" என்றார்.

கூர்க்க சிப்பாயின் முகம் மலர்ந்தது. "ஓ, குடையைப் பிடித்துக் கொண்டு குதிப்பதா? அப்படியானால் சரி. வெறுமனே குதிக்கச் சொல்கிறீர்களாக்கும் என்று நினைத்தேன்!" என்றார் அவர்.

* * *

அர்ப்பணம்!

சில பிரபல ஆசிரியர்கள் தங்களுடைய சில நூல்களை அர்ப்பணம் செய்திருக்கும் வசனங்கள் ரொம்ப ரஸம்:

பி. ஜி. வோட் ஹவுஸ் (ஆங்கில விகட ஆசிரியர்): "எவளது சலியா ஊக்கமும் ஓயா உதவியும் இல்லாதிருந்தால், இந்த நூல் எழுதப்பட்ட நேரத்தில் பாதிக்காலத்தில் பூர்த்தியாகியிருக்குமோ அந்த என் மகளுக்கு இது அர்ப்பணம்."

பிரான்ஸ் ஹாக்கட்டு (ஆங்கிலக் கதாசிரியர்): "இந் நூலிலே எவளுக்குத் துளியும் சிரத்தையில்லாதிருந்தது எனது தீராத் துயரமோ, அந்த என் மனைவிக்கு இது அர்ப்பணம்."

எச். டபிள்யூ. பௌலர் (ஆங்கில அகராதி ஆசிரியர்): "இலட்சிய மனைவியை நிஜ மனைவி எப்படித் தோற்கடித்துவிட முடியும் என்று எனக்குப் போதித்த உத்தமிக்கு இது அர்ப்பணம்."

கெப்ளர்: (ஜெர்மன் வான சாஸ்திரி): "பகடையை உருட்டியாயிற்று; புஸ்தகத்தை எழுதியாயிற்று. தற்காலத்தவர் படிக்கட்டும்; அல்லது பிற்காலத்தவர் படிக்கட்டும். எவர் படித்தாலும் எனக்குக் கவலையில்லை. ஒரு வாசகனைப்பெற ஒரு நூற்றாண்டு தான் இந்தப் புத்தகம் காத்திருக்கட்டுமே, என்ன மோசம். என் னைப்போல் ஓர் அவதானிக்காக கடவுளே 6000 வருஷங்கள் காத்திருக்கவில்லையா?"

பீட்ரோ மாஸ்காக்னி (விமர்சகர்களின் அட்டகாசத்தில் வெறுப்படைந்த கவிஞர்): "உன்னத மதிப்பு வாய்ந்தவனும் யாராலும் மாற்ற முடியாத திருப்தியடைந்தவனுமான எனக்கே இது அர்ப்பணம்."

* * *

அதிலும் ஒரு சூட்சுமம்

கிராமபோன் முதலிய பல அபூர்வ விந்தைகளைக் கண்டு பிடித்த தாமஸ் எடிஸன் என்ற பிரபல விஞ்ஞானியைச் சில நண்பர்கள் பார்க்க வந்தார்கள். நாம்கண்டு பிடித்த பல ஆச்சர்ய இந்திரங்களை அவர்களுக்கு ஒவ்வொன்றாகக் காட்டி, "மனிதனுடைய வேலைச் சிரமத்தைக் குறைத்து, சகாயம் செய்யக் கூடியவை இத்தனையும்" என்று சொன்னார்.

வந்தவர்கள் இந்த அனைத்தையும் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். ஆனால், அவர்களுக்கெல்லாம் ஒரே ஒரு விஷயம் மாத்திரம் புரியவில்லை. அதைப்பற்றி அவர்களில் ஒருவர் கேட்டார்: "இதெல்லாம் சரி, மிஸ்டர். எடிஸன்! உங்கள் வாயிற்படியிலே ஒரு சுழல்கதவு வைத்திருக்கிறீர்களே, அது மட்டில் ஏன் மிக மோசமாக இருக்கிறது? அதைச் சுற்றி விட்டு உள்ளே வருவதற்குள் பிராணன் போய் விடுகிறதே! அது ஏன் இவ்வளவு கடுமையாயிருக்கிறது?"

எடிஸன் சொன்ன பதிலாவது: "ஓ! அதுவா? அது ஒரு யந்திரக் கதவு. அது ஒரு தரம் சுற்றினால், அதில் பிணைந்துள்ள விசை, எட்டு காலன் தண்ணீரை, என் வீட்டு மாடியில் உள்ள டாங்கியில் இறைத்து விடுகிறது."

திருத்தம்

அமெரிக்காவில் ஒரு சாப்பாட்டு விடுதி மிகமிக ஆபாசமாக இருந்தது. அதைவிட ஆபாசம் உலகத்திலேயே கிடையாது அந்த விடுதியின் சொந்தக்காரி ஒரு நாள் பெரிய எழுத்துக்களில் கீழ்க் கண்டபடி எழுதி வாசல் கதவில் தொங்கவிட்டாள்:

"கால்களைக் கழுவிக் கொள்ளுங்கள்." இதைப்பார்க்க சீன மாணவன் ஒருவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. உடனே அதே போர்டில் கீழே பின் வருமாறு எழுதி வைத்துவிட்டான்:

"வெளியே போகும் போது"

* * *

ஒரு ரசமான பந்தயம்

ஒரு ஸ்காத்லாந்துக்காரனும் ஒரு இங்கிலாந்துக்காரனும் ஒரு ரசமான பந்தயம் வைத்துக் கொண்டார்கள். இங்கிலாந்துக்காரன் தன் புத்திசாலித்தனத்தை நம்பி பந்தய நிபந்தனைகளைத் தானே விதித்தான். "நான் ஒரு கேள்வி கேட்பேன். அதற்கு நீ பதில் சொல்லத் தவறினால் எனக்கு நீ 12 அணா கொடுத்து விடவேண்டும். நீ கேட்கும் கேள்விக்கு நான் பதில் சொல்லத் தவறினால் நான் உனக்கு 15 ரூபாய் கொடுக்கிறேன்" என்று இங்கிலாந்துக்காரன் சொன்னான். ஸ்காத்லாந்துக்காரன் இந்த நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டு பின் வரும் கேள்வியைக் கேட்டான்:

"நூறு கால்கள் உடையது. அது பின் நோக்கிப் பறக்கும். அதை மடித்து சட்டைப் பைக்குள்ளும் வைத்துக்கொள்ளலாம். அது என்ன?"

பதில் சொல்லத் தெரியாத இங்கிலாந்துக்காரன், 15 ரூபாயைக் கொடுத்து விட்டான். பிறகு, "நீதான் அது என்ன என்று சொல்லு" என்றான்.

"எனக்குத் தெரியாது" என்று சொல்லி பந்தய நிபந்தனைப்படி 12 அணாவைக் கொடுத்து விட்டான், ஸ்காத்லாந்துக்காரன்!

—எல். எச். ஜே.

* * *

வெற்றி

பிஜர்ன்ஸன் என்பவர் நோபல் பரிசு பெற்ற நார்வே நாட்டுக் கவிஞர். அவரிடம் பத்திரிகை நிருபர் போய், "உங்கள் வாழ்க்கையில் மயிர்க் கூச்செறியக் கூடியதாகவும், ஆனால் உங்களுக்கு வெற்றியாகவும் அமைந்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்லுங்கள்" என்று கேட்டார்.

பிஜர்ன்ஸன்: என் வீட்டை ஒருதடவை என் அரசியல் விரோதிகள் முற்றுகையிட்டு வீட்டு ஜன்னல்களை எல்லாம் உடைத்தெறிந்து விட்டார்கள். அப்போது "ஆம், எங்கள் நாட்டை நாங்கள் நேசிக்கிறோம்" என்ற பாட்டைப் பாடிக்கொண்டிருந்தார்கள். இந்தச் சம்பவமே எனக்குவெற்றியாகவும், மயிர்க் கூச்செறியச் செய்யகூடியது மாகவும் அமைந்த சம்பவம்.

நிருபர்: இப்படிப்பட்ட பயங்கரமான சம்பவம் உங்களுக்கு வெற்றியாக எப்படி இருக்க முடியும்?

பிஜர்ன்: அவர்கள் பாடிக் கொண்டிருந்த பாட்டு, நான் எழுதியது.

—எங்ரியன் ஆண்டர்ஸன்

* * *

காகதாலியம்!

ஸெஸில் ஹண்ட் என்பவர் எழுதிய 'எனது ரத்தக் குழல்களில் மையோட்டம்' என்ற புத்தகத்தின் விளம்பரத்துக்காக பிரசுரகர்த்தர்கள் கார்டுகள் அச்சடித்தார்கள்.

அந்தக் கார்டுகளில் தபாலாபீஸ்காரர்கள் "ரத்த தானம் பண்ணுங்கள்" என்று முத்திரை குத்தினர்கள்.

—டெய்லி ஹெரால்ட்

வருந்துகிறோம்.

"நம்நாடு" இதழின் உதவி ஆசிரியர் தோழர் காஞ்சி கல்யாண சுந்தரம் அவர்களின் ஒரே மகனும், காஞ்சீபுரம் திருவாளர் பச்சையப்ப முதலியார் அவர்களின் மருமகனுமான தோழர் அருணாசலம் (ராமு) அவர்கள் சின்னாட்களாக 'டைபாய்ட்' ஜுரத்தினால் உடல் நலக் குறைவாக இருந்து (28—7—54) பகல் ஒன்றரை மணிக்கு காலமானார் என்ற செய்தி கேட்டு திடுக்கிட்டோம், தாங்கொணா துயரடைந்தோம். தோழர் அருணாசலத்திற்கு வயது 22. தனயனை இழந்து தவிக்கும் தந்தைக்கும் மற்றோருக்கும் நம் வருத்தத்தையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

Printed at Ponni Achakam, Madras-1. Editor & Publisher KANNADHASAN, 2, Shanmuga Mudali Street, Madras-14.